# விடுதலைப்புலிகள்

குரல் 103 | பங்குனி - சித்திரை 2002 | அன்பளிப்பு 10/=

# தாயகம் - தேசியம் - தன்னாட்சி நிரந்தரத் தீர்விற்கான அடிப்படைகள்

## - தேசியத் தலைவர் பிரபாகரன் தெரிவிப்பு -



கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் (10-04-2002) நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தெரிவித்திருந்தார். 700ற்கும் மேற்பட்ட செய்தியாளர்களைச் சந்தித்த தலைவர் அவர்கள் சுமார் இரண்டரை மணிநேரம் செய்தியாளர் மாநாட்டை நடாத்தியிருந்தார். அங்கே பலதரப்பட்ட கேள்விகளுக்கும் அவர் விரிவான பதில்களை வழங்கியிருந்தார்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள் பற்றியும் - புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடுகள் பற்றியும் ஊடகவியலாளர்கள் தொடுத்த வினாக்களுக்கு விடையளித்தார். இச் செய்தியாளர் மாநாட்டில் தலைவர் பிரபாகரனுடன், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களும்,

திருகோணமலைத் தளபதி கேணல் பதுமன் அவர்களும், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் உடனிருந்தனர் செவ்வியின் முக்கிய அம்சங்களை கீழே தொகுத்தளித்துள்ளோம்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமாதான முயற்சிகளில் புலிகள் இயக்கத்தின் நேர்மை - மற்றும் உண்மைத் தன்மை பற்றிக் கேட்டபோது தலைவர் பிரபாகரன் கூறினார் ''நாங்கள் உண்மையாகவும் - நேர்மையுடனுமே சமாதான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம். நாங்கள் ஒரு உண்மையான சமாதானத்தை விரும்புகின்றோம். ஆரம்பத்தில், ஒருதலைப்பட்சமாக நான்கு மாதங்களாக நாம் தான் போர்ஓய்வைக் கடைப்பிடித்திருந்தோம். அது மட்டுமல்லாது சமாதான சூழலை உருவாக்குவதற்காக தொடர்ந்தும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம்.''

இலங்கையிலிருந்து அதிகதொலைவிலுள்ள நோர்வே நாட்டை பேச்சு அனுசரணையாளராக தேர்ந்தெடுக்க எவை காரணம் என்று ஒரு பத்திரிகையாளர்கேட்ட போது தலைவர் பிரபாகரன் சொன்னார்— ''அரசியல் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் நோர்வே பிரபல்யம் பெற்றுள்ளது. பல நாடுகளில் மக்கள் இனங்களுக்கு இடையேயான பிணக்குகளை தீர்த்துவைக்கும் முயற்சிகளில் நோர்வே ஈடுபட்டுவருகின்றது. நோர்வேயின் அனுசரணையை முதலில் சிறிலங்கா அரசே கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. நோர்வே ஒரு நடுவுநிலையான நாடு. இந்தப் பிராந்தியத்தில் அதற்கென எந்தவொரு மூலோபாயநலனும் இல்லை. இந்த வகையில் சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்குவதற்குப் பொருத்தமான நாடு நோர்வே என்று நாமும் கருதியதால் அதை அனுசரணையாளராக எமது இயக்கமும் ஏற்றுக் கொண்டது.''

அமெரிக்க நகரங்களை தாக்கிய தற்கொலை விமானத்தாக்குதல் நடந்த ''செப்டெம்பர்-11'' சம்பவத்தின் விளைவாக எழுந்த உலக அரசியற் சூழலே புலிகள் இயக்கத்தை சமாதானப்பாதைக்கு இழுத்துவந்தது என்று கூறப்படுவதுபற்றி தலைவரிடம் ஒரு செய்தியாளர் கேட்டபோது அவர் சொன்னார்- ''அவ்வாறுஇல்லை... அந்த சம்பவம் நடக்க நாலுமாதங்கள் முன்னரே நாம் ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தை பிரகடனப்படுத்திக் கடைப்பிடித்திருந்தோம். அதுமட்டுமல்ல, நோர்வேயின் சமாதான தூதர் எரிக்சோல்கெயிம் வன்னி வந்து எம்மைச் சந்தித்திருந்தார். அவரிடம், நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம் என்றும், பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருக்கின்றோம் என்றும் கூறியிருந்தோம். எனவே செப்-11 சம்பவத்தின் விளைவாகவே நாம் சமாதானப் பாதைக்கு வந்தோம் என்று கூறுவது தவறு'' என்று தலைவர் அவர்கள் தெளிவுபடுத்தியிருந்தார்.

அப்படியானால்; புலிகள் இயக்கம், சமாதான வழிமுறையை நாடியதற்கு என்ன காரணம் என்று செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது தலைவர் கூறினார்... ''எமது மக்களின் அரசியல் போராட்டம், முதலில் சாத்வீக வழியிலேயே ஆரம்பமானது. முன்னைய தமிழர் தலைமைகள் சாத்வீகப் போராட்டத்தின் மூலம் எமது மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுவிடலாம் என நம்பினர். ஆனால், அவர்களது அகிம்சைப் போராட்டத்தை சிங்கள அரசு ஆயுதபலம் கொண்டு நசுக்கிய போது, ஆயுதங்களைக் கையிலெடுத்த நாம் எம்மைத் தற்காத்துக்கொள்ளப் போராடினோம். எனவே, புறச்சூழலின் நிர்ப்பந்தத்தால் தான் நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். எனினும் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம், தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சிங்கள அரசுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடாத்திவருகின்றோம்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டியதன் நோக்கமென்ன என்று கேட்டபோது தலைவர் சொன்னார் .. ''புலிகள் இயக்கம் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவது தொடர்பாக பல்வேறான தப்பபிப்பிராயங்கள் பரப்பப் பட்டுவருகின்

( 14ஆம் பக்கம் பார்க்க )

# பூகம்பத்தில் கட்டப்படும் புத்தம்புது மாளிகை

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகள் நம்பிக்கை தரும் வகையில் நடந்தேறி வருகின்றன.

சமாதான வழியில் அரசியல் தீர்வுகாணும் திடசிந்தையுடன் தலைவர் பிரபாகரனும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேர்மையுடனும், நிதானத்துடனும் செயலாற்றி வருகின்றனர்.

இந்தச் செயலுறுதி காரணமாக இவர்கள் உலகத்தலைவர்களின் பாராட்டுக்களையும் - ஆதரவையும் பெற்றுவருகின்றனர்.

எனினும்,

இலங்கை அரசியலில் உச்ச அதிகாரத்தை தன்வசம் கொண்டுள்ள சனாதிபதி சந்திரிகா அம்மையார் இந்த சமாதான முயற்சிகளுக்கு கடுமையான எதிர்ப்பையும் - ஒத்துழையாமையையும் வெளிப்படையாகக் காட்டி வருகிறார்.

இராணுவ வழியில் தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்க மக்களாணை கேட்டு கடந்த நாடாளுமன்றத்தேர்தலில் பரப்புரை செய்த அம்மையாரின் கட்சியை நிராகரித்த மக்கள், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கட்சிக்கு சமாதான ஆணை வழங்கிய பின்னரும் கூட அம்மையார் தனது போர் வெறியைத் தணித்தபாடில்லை.

முப்படைத்தளபதிப்பதவியையும் - அனைத்து விவகாரங்களிலும் நிறைவேற்று அதிகாரத்தையும் உடைய சனாதிபதி ஒருவர் தனது ஆட்சி வரம்பின் கீழ் நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக கருத்துக்கூறுவது சாதாரண விடயமல்ல.

அவர் கூறித்திரிவது போல, அவர் நினைத்தால் ஒரு நொடியில் அமைதி முயற்சியை தலைகீழாகப் புரட்டிப் போடக்கூடிய அதிகாரபலம் அவரிடமுண்டு.

இந்த உச்ச அதிகாரத்தை சனாதிபதிப்பதவிக்கு ஒதுக்கிவரும்- முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியாகப் பதவி வகித்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திச்செய்த ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஏராளம். தனது அரசியல் எதிராளிகளை அநாகரிகமான வழிவகையில் பழிவாங்க தனது உச்ச அதிகாரங்களை அவர் பயன்படுத்தியது உலகறிந்த செய்திகள்.

இதே பதவிகொடுத்த அதிகார பலத்தைப் பயன்படுத்தி 60 ஆயிரம் சிங்கள மக்களை பிரேமதாசா இலகுவாகக் கொன்றொழித்தார்.

கடந்த ஏழு வருட காலத்தில் தமிழ் மக்கள் மீது ஒரு இனஅழிப்புப் போரைத் தொடர்ச்சியாக நடாத்தி - தமிழரின் வரலாற்றில் இரத்தம் தோய்ந்த ஒரு அத்தியாயத்தைப் படைக்க சனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு இதே அதிகாரம் உறுதுணையாக இருந்தது.




இப்போது, அதே உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி உருவாகிவரும் சமாதான சூழலை அம்மையார் கெடுக்கக்கூடிய ஆபத்தும் உள்ளதை மறக்க முடியாது.

சமாதானத்திற்கான போர் என்ற போர்வையில் அம்மையார் முன்னர் நடாத்திய இனஅழிப்புப் போருக்கு தமிழ் மக்களின் பக்கபலத்துடன், புலிகள் இயக்கம் தக்க பதிலடி கொடுத்திருந்தது.

ஆரம்பத்தில், அம்மையாரின் சதிச்சித்தாந்தத்தால் ஏமாற்றப்பட்ட சர்வதேச சமூகம் அவரது போர்முயற்சிகளுக்கு ஆதரவளித்தது. பின்னர், அம்மையாரின் சுயரூபம் வெளிப்படத்தொடங்கியபோது அவரைக் கைவிட்டொதுங்க அவை முயல்கின்றன.

முன்னர், அவரை சமாதானதேவதை என்றும் பல்லினத்தலைவி என்றும் புகழாரம் சூடிய உலக நாடுகள் இப்போது, அம்மையாரை தீண்டத்தகாதவர்போல பார்க்க முற்படுவதும் சுவையானதொரு காலமுரண்.

சமாதான முயற்சிகளுக்கு எதிரான அம்மையாரின் சொல்லும் செயலும் உலக சமூகத்தால் சினத்துடன் நோக்கப்படுகின்றன.

நாட்டின் அதிஉயர் தலைவியான அவரை இப்போது எந்தவொரு நாடும் அரச விருந்தினராக அழைப்பதைத்தவிர்த்து வருகின்றன. அதே வேளை, கிடைத்த சந்தர்ப்பங்களிலிருந்தும் அம்மையார் தானாகவே விலகிவருகின்றார்.

உலகத்தலைவர்களால் ஒதுக்கப்பட்டு - தனிமைப்பட்டு வரும் ஒரு நாட்டின் தலைவியாக சந்திரிகா அம்மையாரின் நிலை மாறிவருகின்றது.

உள்நாட்டில் மக்கள் செல்வாக்கை இழந்தாலும் - சர்வதேச அளவில் கீர்த்தியிழந்த நிலை எழுந்தாலும் அம்மையாரின் அதிகார மமதை - கர்வம் இன்னும் குறைவடையவில்லை.

அண்மையில் அமெரிக்காவிலிருந்து சமாதானப்பயணம் மேற்கொண்ட தெனாசிய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவைச் சந்திக்க மறுத்து - அமெரிக்க அரசை உதாசீனம் செய்து - அவமானப்படுத்தியுள்ளார்.

ஆணவத்திமிருடன் அவர் எதையும் செய்யத் தயங்கமாட்டார் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

எதையும் சாதிக்கக்கூடிய அதிகாரத்தையும் - எதையும் செய்யக்கூடிய குணவியல்பையும் கொண்ட சனாதிபதி சந்திரிகா அம்மையாரின் அங்கீகாரமும் - ஆதரவும் இல்லாமல் ஒரு சமாதான முயற்சி இலங்கைத்தீவில் அரங்கேற்றப்பட்டு வருவது ஒரு புதுமையான விடயம்தான்.

இருந்தாலும்,

பூகம்பத்தின்மேல் கட்டப்பட்டுவரும் புத்தம்புது மாளிகைபோல இலங்கையின் சமாதான முயற்சிகள் அமைந்துவிடுமோ! என்ற பேரச்சம் நிலவவே செய்கின்றது. ○



★ நோர்வேயின் அனுசரணையுடன் இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் முயற்சிக்கு தேசியரீதியில் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

— பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க —

★ ரணிலின் ஐ.தே. முன்னணி அரசாங்கம் இரண்டு ஆண்டுகளில் வீழ்ந்துவிடும்.

— கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க —

★ அமைச்சரவை தனக்கு விருப்பமில்லாத காரியங்களை செய்கின்றது என்று ஜனாதிபதி முறையிடுவது அரசியல் அமைப்பிற்கு முரணானதாகும்.

— வீரகேசரி - 17/03/2002 —

★ "சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தமிழர்களின் தனிப்பெருந்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் தேசத்தின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு சமாதான முயற்சிகளை மேற்கொண்டு வரும் இவ்வேளையில், மக்கள் விடுதலை முன்னணி, சிகல உறுமய மற்றும் அவர்களுடன் இணைந்த அமைப்புக்கள் தங்கள் அரசியல் இலாபம் கருதி, சமாதான முயற்சிகளைத்தடுத்து, நாட்டை குட்டிச் சுவராக்க முனைகின்றன".

— குருநாகல் கொக்கரல்ல இராஜனசத்தியாராமயவின் பிரதம குரு மஹகல் கடவுல புஞ்யசார தேரர் —

# "பண்டா குடும்பம்போல் உண்டா உலகில்"

## —பாகம் இரண்டு—

வரலாற்றின் வலிய இரும்புக் கரங்கள் சிங்களத்தின் குரல்வளையை இறுகப் பற்றி நெரிப்பதை இப்போது நாம் காண்கின்றோம். மூழிகள் பிதுங்க சிங்களம் ஒப்புதல் வாக்குமூலங்கள் அளிப்பதைப் பார்க்கின்றோம். இதனிடையே ஒரு குரல் மட்டுமே வேறுபட்டும் மாறுபட்டும் சுருதி பேசியும் இடைவிட்டு ஒலிப்பதையும் கேட்கின்றோம். அக்குரல் பண்டா குடும்பத்துக் குரல் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். சிங்களத்தையே நாசம் செய்யும் பண்டா குடும்பத்தின் பாவங்களை இக்கணத்தில் நினைத்துப்பார்க்கின்றோம். தந்தை தாய் மகள் என விரியும் பண்டா குடும்பத்து ஆட்சியில் 'தந்தை' இனமானம் என்றால் என்ன என எமக்குரைக்க, தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தினை தாயோ முகிழ்க்கச் செய்ய, மகள் என்ன செய்தார்? என்ன செய்கின்றார்? 1996ம் ஆண்டு ஆனி மாதத்து விடுதலைப் புலிகள் ஏட்டிலே ''பண்டா குடும்பம் போல் உண்டா உலகில்'' என எழுதப்பட்ட கட்டுரையை மீளவும் புரட்டினோம். இப்போது ''பண்டாவின் குடும்பத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் சந்திரிகா அம்மையாருக்கு வரலாறு வழங்கப்போகும் தண்டனை எவ்விதம் இருக்குமென எமக்கு தெரியாவிட்டாலும் அது உச்சத் தண்டனையாக அமையும் என்பதற்கான அறிகுறிகள் இப்போது மிகத் தெளிவாகத் தெரிகின்றன'' என்கிற வரிகளை மீள வாசிப்புச் செய்தோம். 1996ம் ஆண்டின் பின்னால் அவர் செய்த இமாலயத் தவறுகளுக்கான தண்டனைகளையும் சேர்த்தால்? அவை என்னவாக இருக்கும்? சிந்தித்தோம்.

அதேவேளை பண்டா குடும்பத்தினரின் (சுனேத்திராவை விலக்கி) ஆளும் ஆசை அதாவது நாட்டை நாசம் செய்யும் ஆசை இப்போது அனுராவையும் விட்டபாடில்லை என்பதை அறியும் போது சிங்கள மக்களுக்காக ஒன்றல்ல இரண்டு சொட்டுக் கண்ணீர் உதிர்க்க நாம் தயாராகவுள்ளோம். உண்டு கொழுத்து உலகெல்லாம் அலைந்து எப்பதவி கிடைத்தாலும், அதை எவர் தந்தாலும் மகிழ்ந்து கிடைக்காவிட்டால் கண்ணீர் சிந்தி அழும் சிங்கள அரசியலின் உதவாக்கரை செல்லப் பிள்ளை அண்மையில் கூறிய கருத்துக்களிவை. ''எனக்குப் பிள்ளைகள் கிடையாது. எனது சகோதரி சுனேத்திராவிற்கும் பிள்ளைகள் கிடையாது. சிறிய சகோதரியின் பிள்ளைகளோ அரசியலிற்கு வரப்போவதில்லை. எனக்குப்பின் எவரும் சுதந்திரக்கட்சியின் தலைவராக வரமுடியும். அதற்கு இன்னொரு பத்தாண்டுகள் பொறுக்குமாறு கட்சி உறுப்பினர்களை வேண்டுகிறேன் அதுவரை தலைமைப் பதவியை யாருக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. 2006ம் ஆண்டில் சனாதிபதித் தேர்தலில் நானே போட்டியிடுவேன். கட்சி சென்ற தேர்தலில் தோற்றால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தருவதாகக் கூறிய வாக்குறுதியை அக்கா நிறைவேற்றவில்லை'' என அவரின் மன ஆதங்கம் நீள்கின்றது. உண்மையில் அனுராவிற்கு நிலைமைகள் விளங்கவில்லையா? தமக்கையாரோடு தமது குடும்பக்கட்சிமுறை முடிவிற்கு வருவதை அவர் உணரவில்லையா? அவரது அக்கா வகித்திருக்க வேண்டிய வரலாற்றுப் பாத்திரத்தை இப்போது ரணில் அச்சொட்டாக வகிப்பதை அவர் அறியாரா?

இக்கட்டத்தில், சந்திரிகா வேடமேற்று நடித்திருக்க வேண்டிய பாத்திரம் பற்றி சுருக்கமாகக் கூறுவதன் மூலம் ரணில் நுழைந்திருக்கும் புதிய பாத்திரத்தின் தன்மையை எமது வாசகர்கள் உணர முடியும். 20ம் நூற்றாண்டிற்குரிய பேரினவாதத்தினை கைவிடமுடியாததால் 21ம் நூற்றாண்டின் ''எல்லா எல்லைகளும் கடந்த'' புதிய வேடத்தினை ஏற்று நடிக்க சந்திரிகாவால் முடியாமற் போனது. ஆனால் ரணிலின் போக்கு வேறுபட்டது. தனது முன்னோர் விட்ட தவறினை அவர் இம்முறை விடத் தயாராகவில்லை. சூழலின் சூழமைவை தன்னைச் சூழ்ந்துள்ள காரிருளை அவர் எவ்வாறோ புரிந்ததால் சிங்களவரின் தலைவனாக இருப்பதைவிட தமிழ் மக்களின் நேசனாக இருப்பதன் மூலமே தனது இலக்கினையும் உலகத்தின் இலக்கினையும் அடையும் பாதைகளில தடையின்றி பயணிக்க முடியும் என அவர் நம்புகின்றார். அவரது இலக்கும் உலகின் இலக்கும் வேறுபடவில்லை. ஆனால் மெத்தப்படித்த பண்டாகுடும்பத்து மகளுக்கு இது புரியவில்லை. புரிந்தால் அதை ஏற்க அவர் சிங்கள மனம் விடவில்லை. இந்த இடத்தில் இக்கட்டுரையின் மையப்புள்ளியிலிருந்து நாம் சற்று விலகி இடைச் செருகல் என்கிற தவறினை செய்வதற்கு வாசகர் எம்மை பொறுக்க வேண்டும்.

உலகிலுள்ள எல்லா நாடுகளினதும் பொருண்மியங்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் நிலையை அதிகரித்தல், சர்வதேச முதலீட்டுப் பொதித்திட்டங்கள், பொருட்கள், சேவைகள், தொழில்நுட்பங்கள் என்பவற்றிலுள்ள தடைகள், எல்லைகள் யாவற்றினையும் நீக்கி நாடுகளின் தேசிய சந்தைகளை ஒன்றிணைத்தலே இவ்வுலகின் போக்கு. இதனையே உலகமயமாக்கல் என்கின்றார்கள். (இவ்விடத்தில் உலகமயமாக்கலின் தொடக்கநிலையே தாராளமயமாக்கல் என்பதையும் இதனை ஜே. ஆர். 1977 களில் தொடக்கினார் என்பதையும் வாசகர் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்) இவ்வகு தேசிய சந்தைகளை ஒன்றிணைத்தலில் ஏற்படும் தடைகளில் சிங்களப் பேரினவாதம் முதன்மைத் தடை என்பதனையே ரணில் புரிந்துள்ளார் என்பதும் தமிழ் மக்கள் மீதான பொருண்மியத் தடை, பாதைத்தடை, உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள் தடை என நீளும் பல தடைநீக்கமும் உள்ளடங்கும் விதத்தினையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே சந்திரிகா தடைகளிட்டார்; ரணில் நீக்குகிறார். தமது இலக்கினை பாழ்படுத்தியதற்காக சர்வதேசம் சந்திரிகாவிற்கு வழங்கிய தண்டனை அவரை முற்றிலுமாக புறக்கணித்து அவர் மீது இடும் அழுத்தம் என்றாகின்றது. இங்குள்ள முரண்நகை என்னவென்றால் சர்வதேசம் புலிகள் மேல்

க. வே. பாலகுமாரன்

அழுத்தம் போடவேண்டும் என்கிற நோக்கும் அம்மையார் பயன்படுத்திய கதிர்காமரையே இப்போது சர்வதேசம் அம்மையார் மீது அழுத்தம் போட பயன்படுத்தும் விந்தைதான். இரண்டுங்கெட்டான் நிலையிலுள்ள கதிர்காமரோ தலைவியின் தாளைப் பணிவதா மேற்குலகின் வெறுப்பை சம்பாதிப்பதா– தெரியாமல் திண்டாடுகின்றார். எது தன் அடிமைச் சேவகத்திற்கு உகந்ததோ அதை அவர் செய்வார். ஆனால் சீற்றத்தின் உச்சியிலும் இயலாமையின் பிடியிலும் சிக்கியிருக்கும் சந்திரிகா என்ன செய்வார்? நாட்டிற்குள் வரும் பிரதி அமைச்சர்மாரை சந்திப்பது தான் சனாதிபதியின் வேலையா என தன் பேச்சாளரை விட்டு அறிக்கைவிடுவார். எந்தவொரு நாட்டிலும் இத்தகையதொரு பாரிய (அவ) மரியாதையை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசியப் பகுதி உதவிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா பெற்றிருக்க மாட்டார் என்பது திண்ணம். இவர் சி.ஐ.ஏ யிலும் 15 வருடங்கள் பணிபுரிந்தவராம். அம்மையாருக்கு உதவியோருக்கு கூட அவமதிப்பு சூழும் காலம் இக்காலம்.

திரும்பவும் பண்டா குடும்ப அரசியலுக்குள் வருவோம். தென்னாசியாவில் பண்டா குடும்பம் போல் உண்டா? இந்தியாவின் நேருக்கள், பாக்கிஸ்தானின் பூட்டோக்கள், பங்களாதேசத்தின் ரகுமான்கள் இவர்கள் எல்லோருக்கும் இல்லாத பெருமை பண்டா குடும்பத்திற்கு உண்டு. ஒரு குடும்பத்திலேயே இரண்டு பிரதமர், ஒரு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு சனாதிபதி என எத்தனை பதவிகள்? ஒரு சனாதிபதியென்கிற எண்ணிக்கையை அதிகரிப்பதே அனுராவின் நோக்கம். ஆனால் தனக்குத் தரப்பட்ட வாக்குறுதியொன்றினை சகோதரியார் நிறைவேற்றவில்லையென குறைபடும் அனுராவிற்கு வாக்குறுதிகளைக் காப்பாற்றாது விடுவதே பண்டாவின் குடும்பத்து பரம்பரைத் தொழில் என்பது தெரியாது போய்விட்டதா? அல்லது அதற்காக வழங்கப்பட்ட தண்டனைகளையும் அவர் மறந்துவிட்டாரா? ஆனால் நாம் மறக்கமுடியுமா?

1959ம் ஆண்டு செப்ரம்பர் 28 ஆம் திகதி காலையில் அலரிமாளிகைக்குள் புகுந்த சோமராம தேரர் பண்டார நாயக்காவை நேருக்கு நேர் சுட்டதற்கு என்ன காரணம்? விகாரைக்குள் முடங்கிக் கிடந்த பிக்குகளை வீதிக்கு இறக்கித் தனது தலைமையில் பிக்குகள் முன்னணியை உருவாக்கி பதவிக்குவர தன்னைப் பயன்படுத்திய பின் தனக்கு தரப்பட்ட வாக்குறுதிகளை பண்டா நிறைவேற்றவில்லையென புத்தரகித்ததேரர் கொதித்ததே காரணம். சிறிமாவை பதவிக்கு கொண்டுவரப் பாடுபட்ட இளைய ஜே. வி. பி. யினர் பதவிக்கு வந்தபின் சிறிமா தமக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமையும் ஒரு காரணமாகக்கொண்டே 1971 இல் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஜே. ஆர். தன் பங்கிற்கு தண்டனையாக பின்னர் சிறிமாவோவின் குடியியல் உரிமைகளைப் பறித்து இழிவுபடுத்தினார். எனவே இவர்களின் மகளுக்கு வரலாறு இனி வழங்கப்போகும் தண்டனை என்ன? இங்கே நாம் எழுப்பும் கேள்வி இதுதான். தந்தை, தாய், மகள் என இவர்கள் தமிழினத்தை ஏமாற்றிய துரோகத்தனத்திற்கு, அழிவிற்கு, குடிகெடுப்பிற்கு, நாசத்திற்கு எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமான தண்டனையை பண்டா குடும்பத்தின் சார்பாக பெறப்போவது யார் என்பதே. அது சந்திரிகாவே என்பதே வரலாற்றின் தீர்ப்பு. ஏற்கனவே அம்மையாருக்கு தண்டனை வழங்கும் பணியை வரலாறு ஆரம்பித்துவிட்டது.

தோல்விக்கு மேல் தோல்வி, அவமானத்திற்குமேல் அவமானம். அம்மையார் தீயிலிட்ட புழுப்போல துடிக்கின்றார். யாப்பில் அவருக்குள்ள அனைத்து அதிகாரங்களையும் அவர் பயன்படுத்த முடியாமல் தவிக்கின்றார். அரசாங்கத்தின் தலைவராக நாட்டு நிருவாகத்தின் தலைவராக ஏன் முப்படைகளின் பிரதம தளகர்த்தராகக் கூட அவரால் செயற்படமுடியவில்லை. அமைச்சரவை கூட்டங்களுக்கு தலைமைதாங்கப் போனால் கேலி செய்து எள்ளி நகையாடப்படுகின்றார். அவருக்கு அறிவிக்காமலேயே அமைதி பிரகடனப்படுத்தப்படுகின்றது; சனாதிபதி மாளிகையே கூண்டாக கூண்டில் அடைக்கப்பட்ட கிளியாக அம்மையார் சிறகடிக்கின்றார். பண்டா குடும்பத்து பாவங்களுக்கெல்லாம் சேர்த்து மனவேதனையில் உழல்கின்றார். ரணிலுக்கு என்ன விளங்கும்? சிறிலங்காவின பொருண்மியத்தை விலைக்கு வாங்கும் திறனும் புலிக்குண்டு எனப் புலம்புகின்றார்.

(9ம் பக்கம் பார்க்க)



எந்த யுத்தத்தினதும் இராணுவ ரீதியான குறிக்கோள் எதிரித் தரப்பின் எதிர்ப்பாற்றலை இல்லாதொழிப்பதே; அதன் இராணுவ முனைப்பைக் கைவிடச்செய்வதே. இதன் மூலம் யுத்தத்தின் அடிப்படையான அரசியல் இலக்கான அமைதியை அடைவதே எல்லா யுத்தங்களினதும் நோக்கமாகும்.

மேலும், சிங்கள மக்கள் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் யுத்த கோசத்தை முன்வைத்தவர்களை ஈவிரக்கமில்லாதவாறு தோற்கடித்துமுள்ளனர் என்பதும் கவனத்திற்குரியது.

ஆக, சிறிலங்காத் தரப்பில் யுத்தம் அமைதிப்படுத்தப்பட வேண்டும் எனும் நிலைப்பாடுதின அடிப்படைத் தார்ப்பரியம். எனவே இந்த அடிப்படைத் தத்துவத்தில் எல்லா யுத்தங்களினதும் முழுமையான யுத்தகாலப் பகுதியில எப்பொழுதும் பெரும் பகுதியை நிரப்பி நிற்பது தற்காப்பே.

யுத்தத்தில் மோதல் ஒன்று தவிர்க்கப்படுவதும் பின்வாங்கு

# தென்னிலங்கை மீளுகிறதா; கனவு கலைந்து நனவிற்கு

எமது யுத்தத்திலும் அமைதி காண்பதற்கான அநேக பிரயத்தனங்கள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான சூழலை யுத்தம் பிரசவித்துவிட்டதா என்பதை இந்த முனைப்புப் பெற்றுத்தரப்போகும் விளைவிலிருந்தே விளங்கிக்கொள்ள முடியும்.

நாட்டின் திறைசேரி நிலை பற்றி சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார் ''சந்திரிகா அரசாங்கம் வெறும் பானையை என்னிடம் தந்துவிட்டுப் போயிருக்கிறது'' என்று.

கடந்த ஏழுவருட ஆட்சியின் அமைச்சரும் தற்போதுள்ள அரசாங்கத்தின் அமைச்சருமாகவுள்ள எஸ். பி. திஸாநாயக்க கூறுகிறார் ''புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளுக்கல்ல; அரசாங்கத்திற்கே அவசியமாகவுள்ளது'' என்று.

சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பலகல்லே கூறுகிறார் ''யுத்தநிறுத்தத்தினால் அதிகம் மகிழ்ச்சி அடைந்து போயிருப்பவர்கள் இராணுவத்தினரே. இந்த உடன்படிக்கையைக் குழப்ப வேண்டாம் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நான் கேட்டுக்கொண்டுள்ளேன்'' என்று.

சிறிலங்காவின் பொருளாதார, அரசியல், இராணுவ நிலைகள் பற்றி அதன் அதிகாரம் மிக்கவர்களால் கூறப்பட்டிருக்கும் கருத்துக்கள் இவை.

வலுவடைந்திருக்கிறது. கால் நூற்றாண்டுகால ஆயுதப்போராட்டத்தை அதன் வலிகளோடு முன்னெடுத்த தமிழினத்திற்கு இது ஆறுதலளிக்கும் விடயமே.

யாழ் நாடு கைப்பற்றப்பட்டுவிட்டதற்கான பாராளுமன்ற நிகழ்வு தந்த போதையும் (முன்னால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவினால் சனாதிபதிக்கு யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட வெற்றிச் செய்தி தாம்பாளத்தில் பட்டுத்துணியில் எழுதிக் கையளிக்கப்பட்ட நிகழ்வு) மேலும், இன்னும் வெற்றிச் செய்

**பிரபுத்திரன்**

திக்காக அவாவி நின்ற அற்புதக்கனவுகளும் இப்போது சிறிலங்காவில் கலைந்து போய்விட்டன.

இப்பொழுது அங்கு அமைதி அனைவருக்கும் வேண்டியதான அத்தியாவசியப் பொருளாயிற்று. எல்லா யுத்தங்களைப் போலவும் எமது யுத்தமும் 'எமக்கான அமைதி'யை இலக்காகக்கொண்டது என்ற வகையில் இந்த அமைதியும் முயற்சித்துப் பார்க்கப்பட வேண்டியதொன்றாயிற்று. இந்த இருதரப்பு இணக்கப்பாட்டில் இப்பொழுது யுத்தம் அமைதிப்பட்டிருக்கிறது.

யுத்தத்தில் தன்னைத் தற்காத்துக் கொண்டு எதிரியைத் தாக்கியழிப்பதே யுத்த தந்திரத்தலும் எப்படி யுத்த தந்திர தற்காப்பு ரீதியானதோ அவ்வாறே யுத்தத்தில் யுத்தம் நிறுத்தி வைக்கப்படுவதும் கூட தற்காப்பு ரீதியானதே.

எனவே யுத்தத்தில் யுத்தம் அமைதிப்படுவதொன்றும் வரலாற்றில் புதிதானதோ, புதிரானதோ அல்ல. தோன்றும் அமைதி யுத்தத்தின் நோக்கான அமைதியை எப்பொழுதுமே தந்துவிடுவதில்லை.

இப்பொழுது எமது யுத்தத்தில் ஏற்பட்டிருக்கும் போர் அமைதி எமக்கான அமைதியைப் பிரசவிக்குமா? என்பதுதான் கேள்வி. அவ்வாறு பிரசவிக்க வேண்டும் என்பதே விலைகளைச் செலுத்திநிற்கும் எமது விருப்பம். இந்த முயற்சித்தலும்கூட அதற்கான அவாவுதலே.

ஆனால், இந்த யுத்தத்தில் கடந்த காலத்தில் எழுந்த யுத்த அமைதி எதுவும் எமக்கான அமைதியைத் தருவதை உள்நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, தமது இயலாமையினால் எதிர்த்தரப்பு அவ்வக்காலங்களில் எழுந்த அரசியல், இராணுவ நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான தற்காப்பாகவே யுத்தஅமைதியை எம்முன் நீட்டிவைத்தன.

தமிழ் மக்கள் தமது வாழ்பிரதேசத்தின் ஒருமைப்பாட்டைத் தானும் பேணுவதற்காயினும் எம்முன் நீட்டப்பட்ட எந்த அமைதியும் இடம்தரவில்லை என்பதிலிருந்து அவை உள்நோக்கத்தில் அமைதியை இலக்காகக் கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிய முடியும்.

இறுதியாக 1994இல் சிறிலங்காத் தரப்பில் எழுந்த 'அமைதிக்கான ஆணை'யில் பிறந்த அமைதி முயற்சிகூட அமைதியைப் பிரசவிக்கவில்லை. அப்போதைய அரசாங்கத்திற்கான அரசியல், இராணுவ நெருக்கடிகளையும், அந்த அமைதிக்காலத்தின் விளைவாக பின்னாளில் சிறிலங்கா தரப்பு கொண்டிருந்த யுத்த சன்னதத்தையும் விளங்குவதிலிருந்து அமைதிக்கான ஆணை கூட அமைதியைப் பிறப்பிப்பதை உள்நோக்காகக் கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியது.

அரை நூற்றாண்டுகால இந்தக் கசப்பான அனுபவங்கள் அமைதி முயற்சியில் ஈடுபடும் தமிழர் தரப்புக்கு ஒரு மனத்தடை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் யுத்தம் அதைவிடவும் கொடியது. மனித உயிர்களின் பெறுமானம் எல்லாவற்றையும் விட மகத்துவமானது. எனவே மனத்தடைகளைக் கடந்து நம்பிக்கையுடன் மீளவும் முயற்சிப்பதில் தவறில்லை. அது ஒரு தார்மீகக் கட்டுப்பாடும் கூட.

எல்லா யுத்தங்களினதும் நோக்கம் அமைதியை இலக்காக அடைவது என்பதற்காக யுத்தங்களில் எழுகின்ற எல்லாப் போர் அமைதிகளுமே வாழ்வின் அமைதியைத் தந்துவிடுவதற்காக நிகழ்வதில்லை. இந்த யதார்த்தம் இருப்பினும்கூட, நிகழ்கின்ற இப்போர் அமைதி எமக்கான வாழ்வின் அமைதியைத் தந்துவிட வேண்டும் என்பதே தமிழர்களின் அவா. இதனை சிறிலங்காத்தரப்பு புரிந்து செயல்படவேண்டும். இந்தப்புரிதலே இம்முயற்சித்தலுக்கு எமக்களிக்கும் நம்பிக்கைச் சக்தி. இதுவன்றேல் நம்பிக்கைக்கான பிடிமானம் இனியேதுமில்லை.

---

யாழ்நாடு கைப்பற்றப்பட்டுவிட்டதற்கான பாராளுமன்ற நிகழ்வு தந்த போதையும் [முன்னால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவினால் ஜனாதிபதிக்கு யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட வெற்றிச்செய்தி தாம்பாளத்தில் பட்டுத்துணியில் எழுதிக் கையளிக்கப்பட்ட நிகழ்வு] மேலும், இன்னும் வெற்றிச் செய்திக்காக அவாவிநின்ற அற்புதக்கனவுகளும் இப்போது சிறிலங்காவில் கலைந்து போய்விட்டன.

---

எல்லா யுத்தங்களினதும் நோக்கம் அமைதியை இலக்காக அடைவது என்பதற்காக யுத்தங்களில் எழுகின்ற எல்லாப் போர் அமைதிகளுமே வாழ்வின் அமைதியைத் தந்துவிடுவதற்காக நிகழ்வதில்லை. இந்த யதார்த்தம் இருப்பினும் கூட, நிகழ்கின்ற இப்போர் அமைதி எமக்கான வாழ்வின் அமைதியைத் தந்துவிடவேண்டும் என்பதே தமிழர்களின் அவா.

---

## ஞானக்கிறுக்கன் கேள்விகள்

★ சமாதானத்திற்காக யுத்தம் நடத்தினவர் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார். இப்ப சமாதானம் வருமாப்போல சூழல் தெரியுதெண்டவுடன் அம்மையார் சமாதானமாக மாட்டாராமே? ஏனாம்?

★ இரு தரப்பும் யுத்த நிறுத்தமொன்றை செய்ய விரும்பிச்சினம். அதால புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றும் கைச்சாத்தாகிற்றுது. யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க கண்காணிப்புக்குழுவும் வந்திறங்கியாயிற்றுது. ஆனா ஒருபகுதி உடன்படிக்கையை இந்தா உடைக்கிறன் எண்டு சபதம் இடுகுது. யுத்த கோசம் முழங்குது. இவையளையும் ஒருக்கா கண்காணிக்க ஆனானப்பட்டவர்கள் ஒருத்தரும் வராயினமாமோ?

★ சந்திரிகாவின்ர அமைச்சராக இருக்கேக்க பீரிசை 'கனவான் அரசியல் வாதி' எண்டு அறிமுகப்படுத்தினார் அம்மையார் இப்ப மற்றத்தரப்பு அமைச்சரானவுடன குண்டே வேணாம் குண்டுச் சிதறலே போதும் எண்டுறார். கனவான் அரசியல் வாதிக்கு குண்டுக் கொலை மிரட்டல் விடுறது பயங்கரவாதமில்லையோ? ஆனானப்பட்டவர்கள் அம்மையாரையும் தடைசெய்வினமோ?

★ உங்களுக்கு ஞாபகம் இருக்கிதோ அம்மையார் ஆட்சில இருக்கேக்க சொன்னவர் 'புலிகள் சமாதானத்துக்கு குறுக்க நிக்கினம். அதால அவர்களுக்கு மேல யுத்தம் செய்யிறன்; தடை செய்யிறனெண்டு' இப்பவும் முப்படை அதிகாரம் அம்மையாற்ற கையில தான் இருக்குது. சமாதானத்திற்கு குறுக்க நிக்கிற தன்ர கட்சிமீதும் கூட்டணி கட்சியல் மீதும் யுத்தத்தை செய்தால் என்னவாம்?

# சிங்கள அரசிற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையே
# போர்நிறுத்த உடன்பாடு

தமிழ் - சிங்கள இன முரண்பாட்டை அமைதிவழியில், அரசியல் ரீதியில் தீர்த்துவைக்கும் உயரிய நோக்குடன் தலைவர் பிரபாகரன் அவர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் போர்நிறுத்த உடன்பாடொன்றில் கையொப்பமிட்டுள்ளனர்.

இருபகுதித் தலைவர்களிடையேயும் காணப்பட்டுள்ள இந்த அரசியல் உடன்பாடானது அமைதிப்பாதைக்கு இடப்பட்டுள்ள உறுதியான அத்திவாரமாக அமைந்துள்ளது.

ஐ. நா. சபை, ஐரோப்பிய யூனியன் உட்பட அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளும் இந்த போர்நிறுத்த உடன்பாட்டை வரவேற்று-பாராட்டியுள்ளன.

''போர் நிறுத்தம்'' என்ற பொருள் பொதிந்த இராணுவ - அரசியல் சொற்பதத்தைப் பயன்படுத்த விருப்பாத சந்திரிகா அரசாங்கம் ''மோதல் தவிர்ப்பு'' என்ற சொல்லாட்சி மூலமே அதை அணுக விரும்பியது. இதன்மூலம், தமிழரின் ஆயுதம் தாங்கிய 25வருட விடுதலைப் போராட்டத்தை ஒரு உள்நாட்டுக் கிளர்ச்சியாகத் தரங்குறைத்து அதை ஒரு பயங்கரவாத நடவடிக்கையாகத் திரித்துக்காட்ட விரும்பியது.

ஆயினும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை ஏற்றுக்கொண்டதுடன் தமிழரின் விடுதலைச் சேனையாகிய புலிகள் இயக்கத்தின் மரபுப் போர்ப்பலத்தைக் கருத்தில் எடுத்து போர்நிறுத்தம் என்ற பாத்திரத்தை பொ. ஐ. முன்னணி மற்றும் ஜே. வி. பி உட்பட சிங்களப் பேரினவாத சக்திகள் கடும் விமர்சனத்துடன் நோக்குகின்றனர்.

மத்தியத்தர் என்ற ஆக்கபூர்வமான பணிக்குப்பதிலாக அனுசரணையாளர் என்ற ''அரசியல் பியோன்'' வேலையை மட்டுமே நோர்வேக்கு வழங்கியிருக்க வேண்டுமென்பது இவர்களது நிலைப்பாடாகும்.

சண்டைநிறுத்த நடைமுறைகளில் - பேச்சுவார்த்தை விடயங்களில் எதேச்சதிகாரப் போக்கைக் கடைப்பிடித்து சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதிலேயே முன்னைய சிங்கள அரசாங்கங்கள் முயன்றன. இதன் விளைவாக, அமைதிச் சூழல்களைக் குழப்பியடித்துவிட்டு அதற்கான பழியை புலிகள்

யத்துவப் பாத்திரத்தாலேயே முடியும்.

இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு மத்தியத்துவப் பாத்திரத்தை நோர்வேக்கு வழங்கியுள்ளது. இது பேச்சுவார்த்தையிலும் - தீர்வுத் திட்டவரையிலும் நடுநிலை பேண உதவுவதுடன், அமைதி நடவடிக்கைகள் நீதியாகவும்- நேர்மையாகவும் நடைபெற வழிசமைக்கும்.

**- எல்லாளன் -**

உடன்பாடு மீறல்கள் தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் நோர்வேக்கு வழங்கப்பட்டுள்ளது. இருதரப்பினரும் தத்தமது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளை வரையறுத்து அதற்குள்ளே தத்தமது தற்காப்பு இராணுவச் செயற்பாடுகளை மேற்கொள்ள உடன்பாடு இடமளித்துள்ளது. இதைக் கண்காணிக்கும் அதிகாரம் நோர்வேக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டு விடயங்களை பேரினவாத சக்திகள் கூட்டமாக விமர்சித்து வருகின்றன. சிறிலங்காவின் இறைமை நோர்வேக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளதென அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை குறைகூறுகின்றனர்.

அதுபோல வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் கடற்புலிகளின் சுதந்திர நடமாட்டத்தை உடன்பாடு ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழர் தாயகப்பகுதியான வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் அரசியல் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் தமது அரசியல் வேலைத் திட்டங்களை ஆற்றுவதற்கு உடன்பாடு இடமளித்துள்ளது. ஆயுதமும் - சீருடையும் தரிக்காத புலிவீரர்கள் வடக்கு கிழக்கின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று அரசியற் பரப்புரைகளையும் சமூக - பொருளாதார வேலைத் திட்டங்களையும் ஆற்றுவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உடன்பாட்டின் வாயிலாகவழங்கப்பட்டுள்ள சர்வதேசஅரசியல் அங்கீகாரமாகவே இது விளங்குகின்றது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாத முத்திரை குத்தி - போராட்டத்தை நசுக்க சந்திரிகா - கதிர்காமர் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். உலகின் சில நாடுகள் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாகவும் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

ஆனால், உலக சமூகத்தின் பேராதரவுடன் நோர்வே முன்னெடுத்த அமைதி முயற்சியில் புலிகள் இயக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் - இராணுவ முக்கியத்துவம் சிங்களப் பேரினவாதிகளுக்குச் சினமூட்டியுள்ளது. இதனால் அவர்கள் உலகசமூகத்தைகண்டன விமர்சனம் செய்துவருகின்றனர். புலிகளைத்தடை செய்த நாடுகளை சந்தர்ப்பவாதிகள் என்று குற்றம் சாட்டுகின்றனர். புலிகளின் அனுதாபிகளாகவே உலக சமூகம் செயற்படுகின்றது என்று திட்டித்தீர்க்கின்றனர்.


புலிகள் இயக்கத்தை தடைசெய்த பலநாடுகள் இப்போது தடைநீக்கம் பற்றிச் சிந்தித்து வருகின்றன. தடை விவகாரம் தொடர்பாக புலிகள் இயக்கத்திற்கு இருந்துவந்த அபகீர்த்தி இந்த புரிந்துணர்வு உடன் பாட்டின் வாயிலாக முழுமையாகவே நீங்கியுள்ளது. அத்துடன், ஈழத்தமிழரின் முழுமையான அரசியல் சக்தியாக புலிகள் இயக்கத்தை சர்வதேசசமூகம் அங்கீகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், சிங்கள இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்குத் துரோகமிழைத்து வரும் தமிழ்க்குழுக்கள் அனைத்தினதும் ஆயுதங்கள் களையப்பட்டு - அவர்களை தமிழரின் தாயக நிலப்பரப்புக்கு அப்பால் விலக்கிவைக்கும் பிரகடனத்தையும் உடன்பாடு கொண்டுள்ளது.

இதுவரை நாளும் இந்த ஆயுதக்கும்பல்களை பாராளுமன்ற அரசியல் கட்சிகளாகக் காட்டி தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திவந்த சிங்களப் பேரினவாதசக்திகளுக்கு இக்குழுக்கள் சந்தித்துள்ள அநாதைத்தனமும், ஏமாற்றத்தையும் கோபத்தையும் கொடுத்துள்ளன. தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்காகப் போராடியவர்கள் யார் - அதற்கெதிராகச் செயற்பட்டவர்கள் யாவர் என்ற உண்மையை இந்த உடன்பாடு வாயிலாக சர்வதேச சமூகமும் அங்கீகரித்துள்ளது குறிப்பிடத்தக்க அரசியல் அம்சமாகும்.

160 நாள் வேலைத்திட்ட இலக்கையும் - படிமுறையாக அமுல் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சி நிரலையும் கொண்ட இந்த புரிந்துணர்வு உடன்பாடு முழுமையாக அமுல் நடாத்தப்படும் போது தமிழர் தாயகத்தில் ஒரு காத்திரமான அமைதிச்சூழல் பிறக்கும். படிப்படியாக இராணுவம்முடக்கப்பட்டு-போக்குவரத்துத் தடைகள் -பொருளாதாரத் தடைகள் - உற்பத்தித் தடைகள் முழுமையாக நீங்கி மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு முழுமையாகத் திரும்பவழியேற்படும்.

ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கு ஏதுவான உகந்த சூழல் ஒன்று இந்த உடன்பாட்டின் வாயிலாக, இவ்விதம் உருவாகும் போது அமைதி முயற்சி நம்பிக்கைதரும் கட்டத்தை அடையும்.



தமிழீழ தேசியத் தலைவரினால் ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நகலை, அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் திரு. ஜோன்வெஸ்போக்கிடம் கையளிக்கின்றார்.

போர்நிறுத்தச் செயற்பாட்டைக் கண்காணிக்கவென நோர்வே தலைமையிலான கண்காணிப்புக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய இந்தக் கண்காணிப்புக்குழு இப்போது தனது செயற்பாட்டைத் தொடங்கிவிட்டது.

''சிறிலங்கா சனநாயக சோசலிச குடியரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயான போர்நிறுத்த ஒப்பந்தம்'' என்ற தலைப்பில் அமைந்துள்ள இந்த உடன்பாடானது, சிறிலங்கா அரசைப் போலவே புலிகள் இயக்கத்திற்கும் சமத்துவமான அரசியல் - இராணுவ அந்தஸ்தை வழங்கியுள்ளது.

இத்தகைய சமத்துவ நிலையை புலிகள் இயக்கத்திற்கு வழங்க முன்னைய சந்திரிகா அரசாங்கம் மறுத்து வந்தது.

இராணுவப் பொருள் நிறைந்த அரசியல் தலைப்பை உடன்பாட்டிற்கு வழங்க உடன்பட்டு இனப்பிரச்சினையின் அரசியல் - இராணுவ யதார்த்தத்தை புலப்படுத்திக்காட்டியுள்ளார்.

மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்தின் மூலமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நேர்மையான வகையில் அரசியல்தீர்வு காணமுடியும் என்ற புலிகள் இயக்கத்தின் நீண்டநாள் நிலைப்பாடு இந்த உடன்பாடு மூலம் அதிகாரபூர்வ வடிவத்தைப் பெற்றுள்ளது.

மூன்றாம்தரப்பு மத்தியத்துவராக நோர்வே அரசை ஏற்றுக்கொண்ட இருதரப்பினரும் அது முன்னெடுக்கும் அமைதி முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க முடிவு செய்துள்ளன.

நோர்வேக்கு வழங்கப்பட்டுள்ள இந்த முக்கிய அரசியல் இயக்கத்தின் மீது சுமத்திவிடுவதே சிங்கள அரசின் வழமையாக இருந்தது. அமைதி முயற்சித்தோல்விகளுக்கு சிங்கள அரசாங்கங்களின் இத்தகைய கடும்போக்கே பிரதான காரணியாக இருந்துவந்தது.

**ஐ. நா. சபை, ஐரோப்பிய யூனியன் உட்பட அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளும் இந்த போர்நிறுத்த உடன்பாட்டை வரவேற்று - பாராட்டியுள்ளன.**

கடந்தகால கசப்பான அனுபவங்களைக் கருத்திலெடுத்த புலிகள் இயக்கமானது, அனுசரணையை அல்ல மத்தியத்துவத்தையே வலியுறுத்தி வந்தது.

போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரையும் சமநிலையில் வைத்துக் கொண்டு சரி - பிழைகளை உறுதியாக எடுத்துக்கூறி, தடைகளையும் - சதிகளையும் நீக்கி, பேச்சுவார்த்தைகளை வெற்றியின் பாதையில் வழிநடத்த மத்தி

# தாயகம்; தேசியம்; சுயநிர்ணயம்.
## எழுச்சிகொள்ளும் தமிழ்த்தேசிய ஆன்மா

**"மரபுவழித் தாயகம்; ஈழத் தமிழ் தேசியம்; தன்னைத்தானே ஆளுகின்ற தன்னாட்சியுரிமை" இவையே கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக இராணுவத் துப்பாக்கியின் நடுவே தலனெழுச்சிபெற்று உரத்துக் குரல் எழுப்பும் ஈழத் தமிழ்த்தேசிய ஆன்மாவின் குரல்**

கால் நூற்றாண்டின் முதன்மையான எழுச்சியாக, ஈழத் தமிழ்ச் சமூகம் இன்றுவரை நிகழ்த்திவரும் எழுச்சி நிகழ்வுகளின் பரிமாணம் சர்வதேச அரங்கில், தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கான அரசியல் அவதானத்தை, நியாயபூர்வத்தை மக்களின் ஏகோபித்த எழுச்சி மூலம் பெற்றுத்தந்தது என்பது மறுப்பிற்கிடமற்றது.

இன்று தமிழர்களுடைய விடுதலைப்போராட்டத்தின் தீர்க்கமானதொரு எழுச்சியின் குறியீடாக, மக்களின் ஏகோபித்த விடுதலை அவாவின் வெளிப்பாடாக அமைந்துவிட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகளின் ஆரம்பம் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்திலிருந்தே ஊற்றெடுத்தது.

ஆயிரம் வரையானோர் காணாமல் போகச் செய்யப்பட்ட யாழ் குடாநாட்டின் ஐந்துவருட இராணுவ ஆக்கிரமிப்பு வாழ்வின் மத்தியில் இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டு அச்சுறுத்தப்பட்ட பல்கலைக்கழக சமூகத்தினரின் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு, முட்கம்பிவேலி போடப்பட்டு இராணுவத்தின் தடைவலயமாக்கப்பட்ட பல்கலைக்கழக வளாகத்தினுள் 2001 சனவரி 17, இராணுவ அச்சுறுத்தல்களையும் தமிழ் விரோத குழுக்களின் மிரட்டல்களையும் மீறிஎழுச்சி கொண்டது.

அன்று ஏற்றப்பட்ட சுதந்திர தீபமும் எடுக்கப்பட்ட பொங்கு தமிழ் பிரகடனமும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்த தமிழீழப் பிரதேசங்கள் எங்கும், மேலும் அன்னிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழர்களிடமும் பரவிப்பற்றியது. இவை கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சிகளின் வரலாறு. இந்த வரலாறு அதனுள் சொல்லும் பாடங்கள் பல.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையிலான ஆயுதப்போராட்டம் முனைப்புப் பெற்று இராணுவ அரசியல் பிரபல்யத்தை அடையத்தொடங்கியது. முதல் கடந்த 2001சனவரி 17 வரையான காலப்பகுதிவரை, 'விடுதலைப்புலிகள் வேறு தமிழ்மக்கள் வேறு' என்றே சிறிலங்கா அரசாங்கங்களினால் பிரச்சாரப்படுத்தப்பட்டு வந்தது. இதையே தமிழ் விரோத சக்திகளும் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கொண்ட மிதவாதத் தமிழ் தலைமைகளுங்கூட சொல்லிவந்தன.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் இராணுவ பலம் உச்சம் பெற்று ஆனையிறவு மீட்பு, "யாழ் குடாநாட்டின் உள்ளான மீட்புச் சமர்கள் என விரிவுபடுத்தப்பட்ட காலப்பகுதியில், இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து கிளர்ந்தெழுந்த மக்கள் புலிகள் தம்மை மீட்பர் என்ற உறுதியில் விடுதலைப்புலிகளின் இராணுவ பலம் மீதான நம்பிக்கையில், அதுவரை தம்மை ஒடுக்கி வந்த சக்திகளை எதிர்த்து 'பொங்கு தமிழெ'னப் பொங்கிப் பிரவாகித்தனர்.

"விடுதலைப்புலிகளே எங்கள் ஏகோபித்த பிரதிநிதிகள்" என கோசமிட்டு "தமிழ் எங்கள் உயிர் அவ்வுயிரே பிரபாகரன்" என தமிழீழத் தேசியத்தலைவரின் படங்களைத் தாங்கியவாறு இராணுவ சோதனைச்சாவடிகளினூடாக அணிவகுத்து ஆர்ப்பரிக்கும் மக்களின் எழுச்சி இன்று மீண்டும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை எனத் தொடர்கின்றது.


தமிழ்மக்களின் அடிப்படை அபிலாசைகளைக்கூட கொச்சைப்படுத்திவந்த ஆளும் அரசாங்கங்கள், நியாயபூர்வமான மக்களின் போராட்டங்களையும், அப்போராட்டங்கள் மீது ஆத்மார்த்தமாக மக்கள் கொண்டிருந்த ஆழமான உறுதியையும் தவறாக எடைபோட்டு, ஆக்கிரமிப்புக்குள் ஆட்பட்டிருந்த மக்களை வெறும் சலுகைகளுக்கும், அற்பமான பண்டங்கள் மீதான கவர்ச்சிக்கும் மயங்கவைப்பதன் மூலம் வெற்றி கொண்டு, மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்கலாம் என நம்பியது. அவ்வாறே தான் தன் இலக்கில் வென்று விட்டதாகவும் எண்ணியது.

அன்புமாறன்

எல்லா ஒடுக்குமுறை ஆட்சியாளர்களும் செய்வது போல, போராடும் மக்கள் மீது அச்சுறுத்தல்களையும், உத்தரவாதமற்ற வாழ்வையும் வாழ்வின் நெருக்கடிகளையும் பிரயோகித்தவாறு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டதாக கூறியும் அவ்வாறு முடியும் என்று நம்பியும் வந்த சிறிலங்கா அரசிற்கு யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களில் மூகிழ்கிவிட்ட பொங்கு தமிழ் எழுச்சி மூலம் எம்மக்கள் கொடுத்த பதில் தீர்க்கமானது.

குறிப்பாக வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் கடந்த ஆண்டு தமிழ் மாணவர் சமூகம் நிகழ்த்திய பொங்குதமிழ் நிகழ்வைத் தடுக்கும் முகமாக சிறிலங்கா இராணுவம் மாணவர் சமூகம் மீது பல நேரடியான அச்சுறுத்தல்களைக் கூட விடுத்திருந்தது. தென்தமிழீழத்தில் நிகழ்த்தப்பட்ட பல படுகொலைகளை நினைவூட்டி அவ்வாறான படுகொலைகள் இராணுவத்தினரை சினமூட்டிய, இராணுவத்தினரின் கட்டுப்பாடுகளை ஏற்கமறுத்த, புலிகளின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் மீதே நிகழ்த்தப்பட்டவை என துண்டுப்பிரசுரங்களை வழங்கி அச்சுறுத்தி பொங்குதமிழ் நிகழ்வை அடக்க முயன்றது.

இம்முயற்சியின் எதிர்வினையாக, இன்னும் உறுதிகொண்ட மாணவர் சமூகம் தென்தமிழீழத்தில் மிகப் பெரியதொரு இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட (1990 இல் இப்பல்கலைக்கழக வளாகத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவி மக்கள் 160 பேர்வரை இராணுவ வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்) வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திலேயே பொங்குதமிழ் எழுச்சிநிகழ்வை நடாத்தி "இனியும் நாம் அடிபணியத் தயாரில்லை" என முகத்திலறைந்து கூறியது. இவ்வாறு கடந்த வருடம் பல்கலைக்கழக, கல்விச் சமூகங்களினால் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வுகள் இன்று ஒட்டுமொத்த தமிழீழச் சமூகத்தினதும் எழுச்சியின் வடிவாக பரிணமித்து நிற்கின்றது.



"விடுதலைப் புலிகளே எங்கள் ஏகோபித்த பிரிதிநிதிகள்" எனக் கோசமிட்டு "தமிழ் எங்கள் உயிர் அவ்வுயிரே பிரபாகரன்" என தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களைத் தாங்கியவாறு இராணுவச் சோதனைச் சாவடிகளின் ஊடாக அணிவகுத்து ஆர்ப்பரிக்கும் மக்களின் எழுச்சி இன்று மீண்டும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை எனத் தொடர்கிறது.

பொங்குதமிழ் இன்று ஒவ்வொரு தமிழனினதும் ஆன்மாவின் குரலாக, நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பரிதவிப்பின் குரலாக, தமது அபிலாசைகளை உலகத்தின் முன் சொல்லும் ஒடுக்கப்பட்டவரின் குரலாக, ஓங்கி ஒலிக்கின்றது. ஆசிரியர் மாணவர், முதலாளி தொழிலாளி, முதியோர் இளையோர் எனப்பேதமின்றி தமது ஆழ்மன அபிலாசைகளை சுதந்திரம்மீதான தமது விருப்பை, விடுதலைக்கான அவாவினை தலைவனின் மீதான தமது நம்பிக்கையை உரத்துக்கூறும் எம் மக்களின் குரல்கள் சொல்லிய செய்திகள் ஏராளம்.

"விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள்" எனக்கூறும் யதார்த்தத்தின் தேவையை தமிழ் மிதவாதக் கட்சிகளிடம் கூட தோற்றுவித்து விட்ட 'பொங்குதமிழ்' சர்வதேசத்தின் முன் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வைத்து விட்ட பங்கிற்குரிய பெருமைக்குரியது.

விடுதலைப் புலிகள் இராணுவ பலம்பெற்று யாழ்குடாவின் வாசலில் நின்று யுத்தநிறுத்தஅழைப்பை விடுத்த போது, புலிகளின் அழைப்பை ஏற்குமாறு சொல்லிபுலிகளின தலைமைத்துவத்தை ஏற்று அணிதிரண்ட 'பொங்குதமிழ்' விடுதலைப் போராட்ட வரலாற்றின் துடிப்பானதொரு கட்டத்தில் இராணுவ துப்பாக்கிகளினால் சூழப்பட்ட மக்களை அணிதிரட்டியதென்பது பதிவிற்குரியதே.

விடுதலைப்புலிகள் இராணுவ பலம்பெற்று யாழ்குடாவின் வாசலில் நின்று யுத்த நிறுத்த அழைப்பை விடுத்தபோது, புலிகளின் அழைப்பை ஏற்குமாறு சொல்லி புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று அணிதிரண்ட "பொங்கு தமிழ்" விடுதலைப்போராட்டத்தின் துடிப்பானதொரு கட்டத்தில் இராணுவ துப்பாக்கிகளால் சூழப்பட்ட மக்களை அணிதிரட்டியது என்பது பதிவிற்குரியதே.

விடுதலை மீதான தமது ஆழ்மன அபிலாசைகளைச் சொல்லி இன்று தேசமெங்கும் எழுச்சிகொள்ளும் தமிழ் மககளின் தன்னெழுச்சி சிங்கள தேசமெங்கும், அப்பால் சர்வதேசத்திலும் ஏற்படுத்திய தாக்க அலைகளின் வீச்சுக்கள பல்வேறு பரிமாணங்கொண்டவை. சுதந்திரம் அவாவிய எம் மக்களின் உணர்வுகளை உரத்துச்சொல்பவை. தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஒருமுறை சொல்லியது போன்று "சீற்றம்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும் சர்வதேசமும் அசட்டை செய்ய முடியாது" என்பதே காலத்தின் இன்றைய கட்டாயமாகி விட்டது. ○

# ஆசையில் மண்ணள்ளிப் போடாது
# மேசைக்கு வாருங்கள் பேசலாம்

உலைக்களம்

வியாசன்

ஊரெல்லாம் ஒன்றாகி
உறவெல்லாம் ஒன்றாகி
உலகெல்லாம் ஒன்றாகி
உணர்வெல்லாம் ஒன்றாகிவிட்டது.
இனி எடுத்துவைக்கும் காலடி ஒவ்வொன்றும்
அர்த்தப்படும்.
கவனம் சறுக்கக்கூடாது கால்கள்.
உற்றுப் பார்த்தபடி கிடக்கிறது உலகம்.
கரைபுரண்டு வெள்ளம் பாயும் போதுதான்
ஆறு அவதானத்தோடு நகரவேண்டும்.
எல்லா வெள்ளத்தையும்ஏற்றபடி
எல்லா அழுக்குகளையும் சுமந்தபடி
நடக்க வேண்டும் நதி.
கடல் முகத்தை முத்தமிடும் வரையும்
கங்கையின் வழியில் கலக்கம் கூடாது.
உழும் போதும், விதைக்கும் போதும்
வயலில் உற்சாகம் போதும்.
பயிர் வளரும் போது மழை போதும்
கதிர் கக்கும் போது காவல் போதும்
அறுவடை நேரத்தில்தான் அவதானம் வேண்டும்.
எமக்கிப்போ அறுவடைக் காலம்
ஊரே கூடி வயலில் நிற்கிறது
நெல்கொண்டு போம்வரையும் நிதானம் வேண்டும்.
முற்றிக்கிடக்கும் வயலை
எவரும் எட்டிமிதிக்கக் கூடாது
பயிரைத் தொடும் பக்குவம் வேண்டும் எமக்கு.
வியர்வைக்குரிய விளைச்சலைப் பெறுவதெனின்
உயர்வுக்குரிய உழைப்பு வேண்டும்.
''பதறாத காரியம் சிதறாது'' இது பழமொழியல்ல
எமக்காகச் சொன்ன புதுமொழி.
எல்லோரும் இன்று ஒன்றானது போல்
எல்லோரும் சேர்ந்து வென்றாக வேண்டும்.
பற்றியெரிந்த காடுகள் இன்று பூப்பூக்கின்றன.
சுற்றியெங்கும் சுடர்கிறது அழகு.
வானமே வடிவுகொண்டிலங்குகிறது.
இந்தளவேனும் வந்ததேயென மகிழ
எந்த நம்பிக்கையும் இன்னும் நமக்கில்லை.
வானம் மப்பும் மந்தாரமுமாகக் கிடக்கிறது
இன்னும் மழைபெய்யவில்லை மண்ணில்,
முகில்கள் கவிகின்றன
முழக்கம் கேட்கிறது
சின்னக் கீற்றாக மின்னலும் வெட்டுகிறதேயன்றி
மண்ணில் ஒருசொட்டு மழையும் விழவில்லை.
கவனம் காற்றுவந்து முகிலைக் கலைத்துவிடலாம்.
நேற்றும் இதுதானே நடந்தது
இந்தா மழையிறங்குமென எதிர்பார்த்த போது
நம்பிக்கையில் இடிவிழுத்திப்போனது காற்று.
முகில்களை முந்தானையில் முடிந்தபடி
போனது அந்தப் பேய்க்காற்று.
இனியும் இது நடக்காதென்பதற்கு என்ன
உத்தரவாதம்?
அதிக நம்பிக்கைதான் ஆகப்பெரிய ஆபத்து
எந்த அவசரமும் வேண்டாம்.
கண்ணிவெடி வயலில் நடக்கும் போது
கவனம் வேண்டும்.
இன்னும் அதிக எச்சரிக்கை வேண்டும்.
பீரங்கிகளுக்கு எதிராகப் போர்டுவது சுலபம்
அமுக்க வெடிகள்தான் ஆபத்தானவை.
''செம்மணி நாச்சியாருக்கு'' திக்குத்திசை தெரியாது
அம்மணியை அடித்தே விழுத்தலாம்.
பேய்கள் பயங்கரமானவை எனினும்
அவைகளை அழித்து விடலாம்.
பிசாசுகள் தான் பொல்லாதன
நல்லதுபோல் நடித்து நாசம் செய்துவிடும்.

பாம்பென அடிக்கவும் முடியாது
கயிறெனக் கடக்கவும் முடியாது.
இது இரவும் பகலுமற்ற இரட்டைப்பொழுது.
மனதினை மயக்கும் மாலைப்பொழுது.
இரவையும் பகலையும் இனம்காண முடியாது.
விளையாடவும் முடியாது
விளக்கேற்றவும் முடியாது.
நாங்கள் கேட்பது உரிமையன்றி பிச்சையல்ல.
உரிமை அரிசிக்காக உலைமூட்டியோர்
பிச்சை அரிசியில் பொங்கமாட்டார்கள்.
சமாதானத்துக்கானதல்ல விடுதலை
விடுதலைக்கானதே சமாதானம்.
போர்நிறுத்தம் பேணப்படுவதால் மட்டும்
அமைதிவருமென அகராதியெதுவும் சொல்லவில்லை.
விடுதலை எட்டும்போதுதான் அமைதி விரியும்
சலுகைகள் மட்டுமெனில் சண்டையே தொடரும்.
கொடுத்த விலைக்கீடாக கொள்ளவில்லையெனில்
படுத்துக் கிடப்பது பச்சைத்துரோகம்;
கல்லறைக் கோவில்களுக்கான காணிக்கை
வெல்வதில் மட்டுமல்ல
வென்றுவரும் விடயத்தில்தான் இருக்கிறது.
எம்மிடம் விட்டுக்கொடுக்க ஏதுமில்லை
எல்லாவற்றையும்தானே எடுத்துவிட்டார்கள்.
கொட்டித்தருவதற்கு அவர்களிடம்
குவிந்துகிடக்கிறது.
பறித்த அனைத்தையும் பார்வைக்கு வைக்கட்டும்
எமக்குரியதை மட்டும் எடுத்துக்கொள்கிறோம்.
இந்த நிலம் முழுதும் எமக்காய் இருந்தது
வேலியடைக்க வந்தவன் விளையாடி விட்டான்.
இப்போ கூலிக்குவந்தவன் குடியிருக்கிறான்
உரிமைக்காரர் தெருவில் நிற்கிறோம்.
வழக்கிப்போ தீர்ப்புக்கு வந்துளது.
முழுக்காணியையும் கேட்பது இனி முறையில்லை
பாதி பாதியாகப் பங்கிடுவதே தர்மம்.
நீதிபதி எழுதும் தீர்ப்பில்தான் நிரந்தர அமைதி.
துயிலுமில்ல வாசலில் வைத்து
தீர்ப்பெழுதச் சொல்வோம்
கொடுத்தவிலை அங்கேதானே கொட்டிக்கிடக்கிறது.
நியாயமும் தர்மமும் நிச்சயம் வெல்லும்
இத்தனை நாள் அழுத அழுகைக்காயினும்
. எமக்கினி வாழ்வு வரவேண்டும்.
வாசல் திறந்து எமக்கது வரும்.
சூரிய குடும்பமாய் சுழல்கின்றோம்
ஆதவனுக்கு எந்த ஆசையும் கிடையாது
விடுதலை ஒன்றேதான் வேதபாராயணம்.
தளரா உறுதியுடன் தழைக்கிறது நம்பிக்கைச் செடி
ஆடு கடிக்காமல் காவலிருக்கின்றோம்.
ஒருகை தட்டி ஓசையெழுப்ப முடியாது
இருகையும் தட்டவேண்டும்.
இனவாதப் பேய்களுக்கு உருவேற்றுகின்றனர்
முன்னைய ''சிவப்பு வேஷங்கள்''.
பொங்குதமிழைப் பார்த்து பொறாமைப்படுகிறது
சிங்கள தேசத்து ''உறுமிமேளம்''.
இத்தனையையும் கடந்துதான்
நேசக்கரம் நீளவேண்டும்.
அவர்கள் உறுதியாய் உள்ளவரை
நாமும் ஒத்துழைப்போம்.
கொடுத்த வாக்குறுதிக்கு கெடுதல் வராது.
ஊசிமுனையில் நாட்களை நகர்த்துவதும்
ஆசைவார்த்தைகளில் காலத்தைக் கழிப்பதும்
அவ்வளவு நல்லதல்ல.
நம்பிக்கைக்கான சமிக்கைகள் இனியும் வேண்டாம்
எமக்குரியதுக்கான எல்லைகளைத் தீர்மானிப்போம்.
நல்ல நண்பர்களாக
நல்ல அயலவராக
ஒன்றெனில் ஓடிவரும் உறவினராக
அருகருகாய் குடியிருப்போம்.
ஆசையில் மண்ணள்ளிப் போடாமல்
மேசைக்கு வாருங்கள் பேசுவோம்.
கடைசி பஸ் புறப்படுகிறது
கை விட்டு விடாதீர்.

# சமாதானப் பேச்சிற்கான அத்திவாரம்

## தலைவர் பிரபாகரன்–நோர்வே குழுவினர் சந்திப்பு

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழுவினர், வன்னிக்கு வந்திருந்த நோர்வேயின் சமாதானத் தூதுக்குழுவினருடன் 26 - 03 - 2002இல் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்தனர்.

சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பில் போர்நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் குறித்தும் - நடைபெறவிருக்கும் எதிர்காலப் பேச்சுவார்த்தைக்கு முன்நிகழ்வாக நடைபெற வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் - சிறிலங்கா அரசுக்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மாதம் ஒன்று கடந்துவிட்டது.

இந்தநிலையில் உடன்படிக்கை விதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஏற்பட்டுள்ள தாமதங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து தலைவர் பிரபாகரன் நோர்வே தூதுக்குழுவினர்க்கு தெளிவாக விளக்கியிருந்தார்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கான பாதைதிறப்பு விவகாரம் கலந்துரையாடலில் மிகமுக்கிய இடம்பெற்றிருந்தது.

ஒப்பந்தத்தின் பிரகாரம், இருதரப்பும் கைச்சாத்திட்டநாளிலிருந்து 30 நாட்களுக்குள் யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதை திறந்துவிடப்பட்டு - அதனூடாக மக்கள் போக்குவரத்துச்செய்ய இருதரப்பினரும் வழிவகைகளைச் செய்து முடிக்கவேண்டும் என்பது உடன்பாட்டின் ஒரு அம்சமாகும்.

பாதை திறப்பிற்கான அனைத்து முன்நடவடிக்கைகளையும் புலிகள் இயக்கம் எடுத்திருந்தது.

ஆயினும், சிறிலங்கா அரசதரப்பிலிருந்து அதற்கான சமிக்கைகள் கிடைக்காததால் குறிப்பிட்ட நாளன்று (மார்ச், 24) பாதைதிறப்பு நடைபெறவில்லை.

பாதை திறப்பில் காட்டப்பட்டுள்ள இந்தத் தாமதம் பற்றி தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வே குழுவினரிடம் சுட்டிக்காட்டியபோது, குடாநாட்டிற்கான ''ஏ 9'' பாதையை எதிர்வரும் 8ஆம திகதி (ஏப்ரல் மாதம்) திறந்துவிடுவதற்கு சிறிலங்கா அரசு இணங்கியுள்ளதாக நோர்வே தூதுக்குழுவினர் தெரிவித்திருந்தனர்.

எனவே, வரும் 8ம்திகதி யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதைத் திறப்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இப்பாதைதிறப்பு நிகழ்ச்சியில் புலிகள் இயக்கத்தின் சார்பில் இரண்டு படைத்தளபதிகளும், சிங்கள அரசின் சார்பில் இரண்டு இராணுவத் தளபதிகளும் பங்கு கொள்ளவுள்ளனர்.

ஆனையிறவு படைத்தளத்தைக் கைப்பற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வலிந்ததாக்குதலின்போதும் பின்னர் சிங்களப் படைகள் நடாத்திய அக்கினிச் சுவாலைக்கு எதிராக வெற்றிகரமாக நடந்த மறிப்புத் தாக்குதலிலும் முக்கிய பங்கேற்ற கேணல் தீபன் அவர்களும் - கேணல் பானு அவர்களும் புலிகள் இயக்கத்தின் சார்பில் பாதைதிறப்பு நிகழ்ச்சியில் பங்கு கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது, சர்வ தேசகண்காணிப்புக்குழுத் தலைவரும் - நோர்வே படைத்துறையின் முன்னாள் மேலாளருமான மேஜர்-ஜெனரல் புருகோவ்டேயும் கலந்து கொள்வார்.

ஏப், 8ம் திகதி காலை 10 மணிக்கு சிறப்புவைபவமாக இடம்பெறும் இந்த பாதைதிறப்பின் போது யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகளும் பயணம் செய்யவுள்ளனர். முதற்கட்டமாக, அன்றையதினம் 15 அரசியல் போராளிகள் குடாநாட்டினுள்ளே அரசியல் பரப்புரைகளை மேற்கொள்ளவும் - சமூக நலத்திட்ட வேலைகளில் ஈடுபடும் நோக்குடனும் செல்லவுள்ளனர்.

இதேசமயம், கிழக்கு மாகாணத்தில் சிங்களப் படையினரால் ஏற்படுத்தப்படும்சில பிரச்சினைகள் பற்றியும் தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வே குழுவினரிடம் முறையிட்டிருந்தார் அங்கே, மக்களின் பிரயாண மார்க்கத்தில் படையினர் காட்டும் அத்துமீறல்களும் - அடாவடித்தனங்களும் நிறுத்தப்படவேண்டும் என்று தலைவர் கோரியிருந்தார்.

போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளை நேர்மையுடனும் - உண்மையாகவும் அமுலாக்குவது பற்றியும் தலைவர் பிரபாகரன் நோர்வே குழுவினரிடம் கலந்துரையாடினார். போர்நிறுத்தவிதிகளை செம்மையாகவும் - காலநிரலின் பிரகாரமும் நடைமுறைப்படுத்த புலிகள் இயக்கம் உறுதியாகவுள்ளது என்று கூறிய தலைவர் அவர்கள் இதேபோன்று சிறிலங்கா அரசதரப்பிலும் நடைபெறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

உடன்பாட்டில் ஏற்றுக்கொண்டதன்படி 90 நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் தரிக்காத போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் சுதந்திரமாக நடமாடி அரசியல் வேலைகள் செய்யவும் - தமது உறவினர்களை சென்றுபார்க்க வழி ஏற்படுத்தப்படவேண்டும் என்ற விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு – இரு பகுதியினர்க்குமிடையே ஒரு சுமூகநிலை ஏற்படுத்தப்படவேண்டும என்றும் தலைவர் கோரியிருந்தார்.

இவ்விதம், உடன்பாட்டின் பிரகாரம், எமது மக்கள் மீதான பொருளாதாரத்தடைகள் நீக்கப்பட்டு - போக்குவரத்துத்தடைகள் அகற்றப்பட்டு - மீன்பிடித்தடைகள் விலக்கப்பட்டு தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மண்ணில் ஒரு இயல்புநிலை ஏற்படுவதற்கு சிங்கள அரசு நேர்மையாக முயற்சிக்க வேண்டும் என்று தலைவர் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறாக தமிழர் தாய்நிலத்தில் ஒரு சுமூக சூழல் தோன்றி மக்களது வாழ்க்கை இயல்புநிலையை அடையும்போது சமாதானப் பேச்சுக்கான சூழல்தோன்றும். இத்தகைய நிலையில் புலிகள் இயக்கம் மீதான தடையை சிங்கள அரசு நீக்கவேண்டும். அப்போது சிங்கள அரசுடன் நேரடிப்பேச்சுக்களில் ஈடுபட புலிகள் இயக்கம் தயாராகும்.

நேரடிப் பேச்சுவார்த்தைக்கு புலிகள் மீதான தடைநீக்கம் அவசியமானது என்பதை நோர்வே தூதுக்குழுவினருக்கு தலைவர் பிரபாகரன் எடுத்துரைத்திருந்தார். சட்டவிரோத இயக்கமாக இருந்துகொண்டு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதிலுள்ள சிக்கல்களை தலைவர் எடுத்துக் கூறியிருந்தார்.

தமிழர்தம் ஏக அரசியல் பிரதிநிதிகளாக இன்று புலிகள் இயக்கம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. தமிழ் அரசியல் கட்சிகளும் புலிகள் இயக்கத்தையும் - தேசியத்தலைவர் பிரபாகரனையும் தங்களது அரசியல தலைமையாகவும் - தேசியத் தலைமையாகவும ஏற்றுக்கொண்டுவிட்டனர். அண்மைக் காலமாக தமிழர் தாயகத்தின் பிரதான நகரங்களில் கோலாகலமாக நடந்தேறி வரும் ''பொங்குதமிழ்'' – மற்றும் ''தமிழ் எங்கள் உயிர்'' எழுச்சி நிகழ்ச்சிகளில் மக்களும்- தமிழ் அரசியற் கட்சித்தலைவர்களும இதை பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய அரசியற் சூழலில், புலிகள் இயக்கத்தை சிங்கள அரசானது தொடர்ந்தும் தடை செய்திருப்பது அரசியல் யதார்த்தத்தை மறுக்கின்ற செயலாகவே உள்ளது. இந்த நிலையில், புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு புலிகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கி - அவர்களை தமிழ் மக்களின் ஏகஅரசியற் பிரதிநிதிகளாக அங்கீகரிப்பது அவசியமானதாகும்.

புலிகள் மீதான தடை நீக்க விவகாரம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. அவ்விதம் புலிகள் இயக்கம் மீதானதடை நீக்கப்படுமாயின் இரு பகுதியினர்க்கும் இடையேயான நேரடிப் பேச்சுவார்த்தைகள் எங்கே நடைபெற வேண்டும் என்றும் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்குமிடையேயான பேச்சுவார்த்தைகளை இந்தியாவில் குறிப்பாக தென்னிந்தியாவில் நடாத்துவதற்கு புலிகள் இயக்கம் விரும்பி அதற்கான அனுமதியை இந்திய மத்திய அரசிடம் கோரியிருந்தது. பிரதம பேச்சுவார்த்தையாளரும் புலிகளின் அரசியல் ஆலோசகருமான திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் உடல் நிலையை கருத்திற்கொண்டு-மருத்துவ வசதிகளைப் பெற்றவாறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும், பேச்சுக்களின் போது அடிக்கடி வன்னிக்குச் சென்று தலைவர் பிரபாகரனைக் கலந்தாலோசித்து பேச்சுக்களை நடாத்துவற்கு வசதியாகவுமே இந்தியாவில் பேச்சுக்களை நடாத்த புலிகள் இயக்கம் விரும்பியிருந்தது.

ஆனால், இன்றுவரை புலிகளின் கோரிக்கைக்குப் பதிலளிக்காது இந்தியமத்திய அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது.

இந்தநிலையில், தாய்லாந்து நாட்டில் பேச்சுவார்த்தைகளை நடாத்தும் படி நோர்வே சிபார்சு செய்தது. சிறீலங்கா அரசும், புலிகள் இயக்கமும் அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளன.



தமிழீழத் தேசியத் தலைவரின் தலைமையிலான குழுவினர்—
அண்மையில் வன்னி வந்திருந்த நோர்வேஜிய குழுவினர் சந்திப்பு

புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசிறகுமிடையேயான நேரடிப் பேச்சுக்கான அத்திவாரத்தை இடுவதில் பெருமளவுக்கு வெற்றி கண்டுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்தசந்திப்பில புலிகள் இயக்கத்தின் சார்பில தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் தலைமையில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம அவர்களும், அவரது பாரியார் திருமதி அடேல் ஆன் அவர்களும் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப தமிழ்ச்செல்வன அவர்களும பங்கு கொண்டனர்.

நோர்வே அரசின் சார்பில் சமாதானக்குழுவில் அங்கம்வகிக்கும் திரு. எரிக்சொல்கெய்ம், சிறிலங்காவிற்கான நோர்வே தூதுவர் திரு. ஜோன் வெஸ்போக, சர்வதேசக்கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவ்ட் மறறும வன்னிப்பகுதியில விடுதலைப புலிகளுடனான தொடர்பாளர் ஜெபியர்ஸ் ஹாட்டிஸ் ரெயினன் ஆகியோர் கலந்துகொண்டனர். ○

# தலைவர் பிரபாகரன் - ஜெனரல் ரொண்ட்புரு கோவ்ட் சந்திப்பு

## ஒரு வரலாற்று நிகழ்ச்சி

புலிகள் இயக்கத்திற்கும் - சிறிலங்கா அரசிற்குமிடையே உடன்பாடு காணப்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கவென, நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவ்ட்' அண்மையில் வன்னிக்கு வருகை தந்திருந்தார்.

அவரை கிளிநொச்சியில் வைத்து 5.3.2002 அன்று சந்தித்த தலைவர் பிரபாகரன் அவர்கள் நட்புரீதியில் சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடினார்.

கண்காணிப்புக்குழுவின் தலைவராக நோர்வே அரசால் இவர் நியமிக்கப்பட்டிருந்தார். நோர்வே இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இந்தத் தளபதி சமாதானப்பணிகளில் நன்கு அனுபவம் பெற்றவராவார்;

1993 முதல் 1995வரை லெபனானில் பணியாற்றிய ஐ. நா. சமாதானப்படைக்கு கட்டளை இடும் அதிகாரியாகச் செயற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்.

கொழும்பு வந்த உடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துக் கலந்துரையாடியபின் தலைவர் பிரபாகரனையும் வன்னியில் சந்தித்து கருத்துப் பரிமாற்றங்களை நடாத்தியுள்ளார்.

16பேர் கொண்ட சர்வதேச கண்காணிப்புக் குழுவுக்கு இவர் தலைவராக இருப்பார். இவர்களுக்கு அநுசரணையாக உள்ளூர் கண்காணிப்பாளர் சபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூர் கண்காணிப்பாளர்சபை தலா ஐந்து பேர்களைக் கொண்டதாக விளங்கும். சிங்கள அரசதரப்பில் இருவரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் இருவரும் இவர்களுக்கு தலைமைதாங்க சர்வதேச கண்காணிப்பாளர் குழுவைச்சேர்ந்த ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வன்னி ஆகிய மாவட்டங்களில் இந்த உள்ளூர் கண்காணிப்பாளர்சபை இயங்கும்.

கொழும்பிலும், கிளிநொச்சியிலும் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச கண்காணிப்பாளர் குழுவின் தலைமையகங்களுடன் இந்த உள்ளூர் கண்காணிப்பாளர் சபை இணைந்து போர் நிறுத்த உடன்பாட்டை சரிவர அமுல்படுத்த உதவி புரியும். சிங்கள அரசும், புலிகள் இயக்கமும் மாவட்டம் தோறும் தத்தமது பிரதிநிதிகளை நியமித்துள்ளனர்.

புலிகளின் சார்பில் மாவட்டம் தோறும் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் வருமாறு. யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அருட்திரு. மரியாம்பிள்ளை ஞானரட்ணம் அவர்களும் திரு. ஆசைப்பிள்ளை கைலாயபிள்ளை அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு திரு. சின்னையா மற்றும் திரு. கிருஸ்ணபிள்ளை அவர்களும்;

அம்பாறை மாவட்டத்திற்கு திரு. சௌந்தரராஜன் திரு. ராசையா சண்முகநாதன் அவர்களும்;

திருகோணமலை மாவட்டத்திற்கு திரு. காசிநாதர் சிவபாலன் மற்றும் திரு. செல்வராசா தர்மலிங்கம் அவர்களும்;

வன்னி மாவட்டத்திற்கு திரு. இரத்தினேஸ்வரக் குருக்கள், திரு வேலுப்பிள்ளை சிவனடியார் அவர்களும்;

மன்னார் மாவட்டத்திற்கு அருட்திரு. அன்ரனி சேவியர் குரூஸ் மற்றும் திரு. பிரான்சிஸ் மரியநாயகம் குரூஸ் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

> நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு
> புலிகள் இயக்கம் தொடர்ந்தும் ஆதரவு
> நல்கும் என்றும் தமிழரின் தேசிய
> இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில்
> நிரந்தரமான அரசியல் தீர்வு காண புலிகள்
> இயக்கம் தயாராகவே இருப்பதாகவும்
> இச்சந்திப்பில் தலைவர் பிரபாகரன் அவர்கள்
> வலியுறுத்திக் கூறியிருந்தார்.

தலைவர் பிரபாகரனைச் சந்தித்துள்ள சர்வதேச கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் - ஜெனரல் ரொண்ட் புருகோவ்ட் அவர்கள் கண்காணிப்புக்குழுவின் பணிபற்றியும் அதற்கான ஒத்துழைப்புகள் பற்றியும் உரையாடியுள்ளார்.

புலிகளின் தரப்பில் போர் நிறுத்த ஒப்பந்தவிதிகள் சரிவரக் கடைப்பிடிக்கப்படும் என்ற உறுதிமொழியை தலைவர் அவர்கள் திரு. ரொண்ட் புருகோவ்ட் அவர்களுக்கு வழங்கியுள்ளார்.

அத்துடன், சர்வதேசகண்காணிப்புக்குழுவினரின் பணிக்குத் தேவைப்படும் அனைத்துவகை உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் புலிகள் இயக்கம் தாராளமாக வழங்கும் என்றும் அவருக்கு உறுதிஅளித்துள்ளார்;

நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் தொடர்ந்தும் ஆதரவு நல்கும் என்றும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் நிரந்தரமான அரசியல் தீர்வுகாண புலிகள் இயக்கம் தயாராகவே இருப்பதாகவும் இச்சந்திப்பின்போது தலைவர் பிரபாகரன் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் பாசறை ஒன்றில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச் சந்திப்பின்போது தலைவர் பிரபாகரன் அவர்களுடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனும், நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்களும் உடனிருந்தனர்.

தலைவர் பிரபாகரனைச் சந்தித்து உரையாடியபின்னர் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் - ஜெனரல் ரொண்ட் புருகோவ்ட் அவர்களும் அவரது குழுவினரும் வன்னியின் முக்கிய சில இராணுவ கேந்திர நிலைகளையும் சென்று பார்வையிட்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தவிதிகள் - நிபந்தனைகளில் ஏதாவது மீறல் சம்பவங்கள் ஏற்படின் அவற்றை விசாரணை செய்து முரண்பாடுகளைத் தீர்த்து ஒப்பந்தத்தைச் சரியான திசையில் வழிநடாத்த இந்தக் கண்காணிப்பாளர் குழு முயற்சி செய்யும்.

சிறிலங்கா தரப்பில் அல்லது புலிகள் இயக்கத்தின் பக்கத்திலிருந்து இக் கண்காணிப்புக்குழு முன் வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக எழக்கூடிய பிணக்குகளைத் தீர்க்க உதவுவதும் இக்குழுவின் முக்கியபொறுப்பாகும்.

இந்த ஒப்பந்த விதிகளுக்கு பொருள் விளக்கம் கொடுக்கும் இறுதியான அதிகாரம் கொண்டவராக குழுவின் தலைவர் ரொண்ட் புருகோவ்ட் இருப்பார்.

சிங்கள அரசுடனும், புலிகள் இயக்கத்துடனும் இடைவிடாது தொடர்பாடல் செய்து நோர்வே அரசிற்கு தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பது இவரது முக்கிய பணியாகும்.

இரு பகுதியினருக்கும் இடையே நடைமுறைப் 'பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் எழும்போதெல்லாம் நேரடியாகவே குறித்த இடங்களுக்குச் சென்று பிணக்குகளைத் தீர்த்து வைத்து சமாதான சூழலை வளர்த்தெடுக்க உதவுவதும் இக்கண்காணிப்புக்குழுவினரின் முக்கிய கடமையாகும்

O

( 03ஆம் பக்கத் தொடர்ச்சி )

## பண்டா குடும்பம்...

அவரது பாதுகாப்பு வியூகங்கள் உடைக்கப்படுகின்றன; அவரது துணைவர்கள் சிறைப்பிடிக்கப்படுகின்றனர்; நிராயுதபாணியாக்கப்படுகின்றனர்; மாமனைக்காப்பாற்ற முடியாத மருமகள் என்றாகிவிட்டார். அவரைச் சுற்றி வலை இறுக்கப்படுகின்றது; அவரது பாதுகாப்புப் பிரிவின் தலைவர் மீது மிகப் பாரதூரமான கொலை, சதிக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. இதற்குத் துணைபோனமைக்காக அவரது செயலரும் ஆயுதங்கள் வழங்க அனுமதி வழங்கியதற்காக அம்மையாருமே குற்றம் சாட்டப்படும் நிலை உருவாகின்றது. சட்டன ஏட்டின் ஆசிரியர் படுகொலை, மாமனிதர் குமாரின் அரசியல் படுகொலை இவற்றின் பின்னால் அவரிருந்தது ஊரறிந்த செய்தி. ஏயர் லங்கா, சனல் 9, ஈவான்ஸ், தவக்கால், துறைமுக இறங்குதுறையென அவரது ஊழல் பட்டியல் விசாரணைகள் வேகமாக தொடர்கின்றன. இவ்வாறான பேரளவிலான ஆயத்தங்களோடு ரணில் அவர் மேல் இறக்கப் போகும் இறுதி இடி எத்தகையது? அவர் மீதான ஒழுக்கவழுவுரைப் பிரேரணைகளைக் கொணர்ந்து அவரைப் பதவி இறக்குவதா? அல்லது தான் ஆட்டுவிக்கும் போது ஆடும் பொம்மலாட்டப் பொம்மையாக அவரைக் கையாள்வதா? இது ரணிலின் முடிவிற்குரியது. இதில்கூட அம்மையார் சுயமாக முடிவெடுக்க முடியாத இக்கட்டான நிலையிலுள்ளார். அதனாலே அவர் ராவய விக்டர்ஐவன் எழுதியது போல ''சீறிப் படமெடுத்து புற்றைவிட்டு வெளியே வருவதும் வந்தவுடன் படத்தை மடக்கி புற்றுக்குள் போவதுமாக'' இருக்கிறார். இவ்வாறு அவர்படும் பாடு சொல்லத்தரமன்று. இதனாலேயே வள்ளுவன் சொல்லிச் சென்றான்.

> ''ஏவவும் செய்கலான் தான் தேறான்
> அவ்வுயிர் போம் அளவும் ஓர் நோய்''

(செய்ய வேண்டியதை நல்லோர் சொன்னாலும் செய்யான் (ள்) தானும் அறிந்து செய்யான் (ள்) அவ்வுயிர் போகுமளவும் ஓர் நோய்-)

✱

களங்களில் காயமடைந்தவர்களுக்கும், நோய்வாய்ப்படுவோர்களுக்கும் மருத்துவர்கள் 'கடவுளாக'த் தெரிவதுண்டு. தமிழீழத்தைப் பொறுத்தவரை பல சந்தர்ப்பங்களில் இயக்க மருத்துவர்களுக்கு கடற்புலிகளே 'கடவுள்களாக'த் தென்படுவர். தமிழீழத்தைப் பொறுத்தவரை அதன் நிலப்பரப்பிலும் நாப்பரப்பு பெரியது. போரிலும் அதன் முக்கியத்துவம் பெரியது. இங்கு மருத்துவத்தின் செயற்பாட்டிறகும் இதுவே ஊட்ட சக்தியென்பது பலரால் புரியப்படாத ஒன்று.

காயக்காரர்களை அடிப்படை மருத்துவ வசதிகளுடன் மட்டும் கிழக்கரியாலை கடற்கரையில் கொண்டுபோய்க் கிடத்தினோம்; கடற்புலிகளின் உதவியுடன் வன்னிக்கு கொண்டு செல்வதற்காக. ஆனால் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் எம பிரதான மருத்துவர்கள் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலேயே முகாமிட்டு இருக்கவேண்டிய தேவை உருவாகியிருந்தது. ஆதலால் வன்னியிலிருந்து மீண்டும் இப்பகுதிக்கு காயக்காரரைக்

# மருத்துவப்பிரிவின் உயிர்வாழ்வு

போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் சிறுகாயங்களுக்கும் எம் கடற்பரப்பைத் தாண்டவேண்டியிருந்தது. யாழ்நகர் எம் கட்டுப்பாட்டினுள் வந்த போதும்; பாரிய காயங்களும், மீள்சீராக்கலுக்கு உட்படவேண்டிய காயங்களும் அவ்வாறே கொண்டு செல்லப்பட்டன. இந்திய ஈழப்போர்க்கால கட்டத்தில் இயலுமியில் இருந்த இயக்க உயிர்மைபத்திற்கான அனைத்துச் சேவைகளும் கடல் வழியாகவே தீர்க்கப்பட்டன.

பாரிய வளங்களின் ஒருங்கூட்டலுடன் மேற்கொள்ளப்பட்ட பூநகரிச் சமரின் போதான சம்பவங்கள் எமக்கு நேரடி விளக்கத்தைக் கொடுத்தன. யாழ் நிலப்பரப்பிலிருந்தும், வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்தும் சிலவாயிரம் போராளிகள் பூநகரி இராணுவ தளத்தினைச் சிதைக்கத் தொடங்கினர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை நான்காம் இலக்கத்தைத் தொட்டது எம் பயன்பாட்டிற்குரிய மருத்துவ வளங்கள் யாழ் மருத்துவமனையிலேயே நிறைந்திருந்தன. ஆதலால் விழுப்புண்ணேற்றவனை வரையும் அங்கு கொண்டு செல்வது தவிர்க்க முடியாததாக அமைந்தது.

பகலில் பூநகரி நீரேரி தாண்டுதல் என்பது முதலைவாயினுள் தலையைக் கொடுப்பதற்குச் சமனானது. வான்பரப்பை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தது சிறிலங்கா வான்படை. சிறு சிறு வேகப்படகுகளில் அனுப்பப்பட்ட அவசரக் காயக்காரர்களுடன் படகுகள் சிதைந்தும், சிதறியும் கடலில் மிதந்தன. காக்க முனைந்தவர்களும் வீரச்சாவைத் தழுவினர். எனினும் போர்ச்சுவாலை முளாசி எரிந்தவண்ணமேயிருந்தது. விழுப்புண் அடைந்தவர்களின் எண்ணிக்கை மருத்துவர்களைக் கையறு நிலைக்கு கொண்டுவந்தது. இறப்பு வீதம் பயங்கரமாக அதிகரிக்கத் தொடங்கியது. இன்றுள்ள சில மூத்த தளபதிகளும், துறைப்பொறுப்பாளர்களும் மரணத்தின் வாசலில் கிடத்தப்பட்டனர். தொலைத்தொடர்புக் கருவிகள் சங்கேத பாசைகளில் அலறுகின்றன. திடீரென கடற்புலிகள் பக்கமிருந்து அதிசய செய்தி வருகின்றது.

- தூயவன் -

நாகதேவன்துறையில் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகுகள் காயக்காரரை ஏற்ற விரைந்து வருவதாக. வார்த்தைகள் தேனாகும் என்பது உண்மையென உணரப்படுகின்றது. நூற்றுக்கணக்கான காயக்காரரை அவர்கள் இக்கரை சேர்த்தனர். இல்லை காலனிடமிருந்து மீட்டனர். காட்சி விளைவுகள் ஏற்படுத்தும் மனப்பதிவின் படி கடற்புலிகள் மீண்டும் மீண்டும் 'கடவுள்களாயினர்'

இப்பொழுது யாழ்நகர் இடம்பெயர்கிறது. யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பலநூறு காயக்காரர்களையும் தென்மராட்சிக்கு நகர்த்த முடியாத நிலை, எமக்கிருந்த நம்பிக்கையெல்லாம் கடற்புலிகள் தான். மீண்டும்

கொண்டு வர வேண்டுமே. இருநாள் கழிய சிலரைப் பிரிந்து சாவகச்சேரி வந்தோம்.

இப்போது தேவைக்கேற்ப பகுக்கப்பட்ட மருத்துவ வளங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு கொண்டுவரப்பட காயமாற்றும், உயிர்காக்கும் செயற்பாடுகள் தென்மராட்சியில் நடைபெற; மணலாறு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் காயமடைபவர்கள் தென்மராட்சி கொண்டுவர என முரண்பட்ட நிலையொன்றில் செயலாற்றினோம். எல்லாவற்றிற்குமான பழுவை கடற்புலிகளே சுமந்தனர். பலவருடங்களாக உருவாக்கப்பட்ட மருத்துவமனைகளை சில நாட்களில் கடலினூடு நகர்த்துவதென்பது கற்பனைக்கு அப்பாற்பட்டது எனினும் அது நிறைவேற்றப்பட்டது. தமது சிறுசிறு மீன்பிடி வள்ளங்களையும் எமக்களித்து மக்கள் தாமும் ஓட்டிகளாக தொழிற்பட்டு அன்று எமக்கு வரலாற்றில் ஏற்பட்ட பாரிய தடை தாண்ட உதவினர்.

இவை இவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருக்க பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்துவாய் சாவகச்சேரியினுள் எதிரி புகுந்து விட்டான். இலட்சக் கணக்கான மக்கள் கிளாலிக்கரையில் உயிரைக்காக்க கூடிவிட்டார்கள் காயமடைந்த போராளிகளை அகற்ற அவர்கள் உதவியது மனதைக் கசியவைத்தது. மக்களோடு சென்ற படகுகளை விமானத் தாக்குதல் மூலம் எதிரி மூழ்கடித்த மனித அவலங்கள் எம மனங்களைக் கல்லாக்கின. சோகங்கள் தொடர்கதையாக கடற் புலிகளின் வேகமான செயற்பாடு மட்டுமே எமக்கு சிறு உற்சாகத்தைத் தந்தது.


இக்காலப்பகுதியில் இன்னொரு அதிர்ச்சியான செய்தி எம் இதயங்களை இடித்தது. வலிகாமம் பகுதியில் நின்ற எமது சிறப்பு அணிகளும், இராணுவ மருத்துவர்களுமாய் பலர் முற்றுகையொன்றை உடைக்க முற்படுகையில் நூற்றுக்கு மேற்பட்டவர் வீரச்சாவடைந்து விட்டனர். அவர்களில் தப்பியிருக்கும் சிலரையும் காயக்காரரையும் இங்குகொண்டுவர வேண்டும். அதற்குக் கடற்புலிகள் பெருங்கடலையே பயன்படுத்தினர். அவ்வேளை அதற்கான எரிபொருளை சேகரிப்பதென்பது மிகவும் சிரமமானதொன்று. அப்பணியில் ஈடுபடும்போது ஒருபடகு விபத்திற்குட்பட்டு சிலர் கடலில் மூழ்கினர். மீண்டும் மீண்டும் சோகங்களைச் சகித்துப் பணியாற்ற வேண்டியிருந்தது.

எமது பலத்தில் 90வீதம் அழிந்து விட்டதென எதிரி அறிக்கை விடுக்கொண்டிருக்க, புலிகள் விஸ்பரூபம் எடுப்பதற்காக மூச்சுவிட நேரமின்றி பயிற்சி எடுத்துக்

கொண்டிருக்க, கைநழுவிவிட்ட மருத்துவ வளங்களை மீளச்சேர்க்க எழும்பு நீண்ட சேர்ப்பதாக உரிய வறறைக் கடற்புலிகள எம்மிடம் கொண்டுவந்து சேர்க்கவென நிகழ்வுகள் தொடர்ந்தன. 1996ம் ஆண்டு யூலை 18 வெற்றிபெறுவேம எனும செய்தியுடனும், பலநூறு காயக்காரர்களுடனும் விடிந்தது.

உயிர்காக்கும் வேகத்தில் எம் மருத்துவ வளங்கள் வறறிப் போயின. சில நாட்களாகான மருத்துவ வசதிகளே எம்மிடம் இருந்தன. எனினும் எதிரி முல்லைத்தீவு தோல்வியை மூடிமறைக்க கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்குடன் 'சத்ஜெய' வைத் தொடங்கி விட்டான. ஓயாத அலைகள்-01 வெற்றியை ஆறுதலுககாயினும் இரைமீட்க முடியாத நிலை. மீண்டும் கடற்புலிகள் கைகொடுத்தனா. எங்கெங்கிருந்தோவெல்லாம் மருந்துகள் கொண்டுவந்து தந்தனர். மீண்டும எம தொழிற்பாடு வேகமெடுத்தது. சமர் தணிவகம் தடைபபடாது தொடர்ந்தது.

பின்னொருதரம் திடீரென திருமலைக் காடுகளில் கரந்துறைந்திருந்த புலிவீரர்கள் தொற்று நோயால் பாதிககபட்டார்கள். சிலபேர் சாவடைந்துவிட்டாரகள். பலபேர் மயககமடைந்துவிட்டார்கள். தொலைத்தொடர்புக்கருவியும் ஈனக்குரலிலேயே செய்தியைத் தந்தது. அவசர மருத்துவ உதவிகள் வழங்கப்படவேணடும. மாரிமழையோ வானைப்பிளந்து கொட்டுகிறது. கடலல் அலைகள் சிறு மலைகளென எழுந்து ஆர்ப்பரிக்கிறது. போர்க்கலங்களை இந் நிலையில் கடலில் இறக்குவதென்பது அவர்களது வரலாற்றில் நடக்காதது. எனினும் கட்டளை



பிறந்தது. கடற்புலிகளின் சிறப்புத் தளபதி உட்பட மூத்த தளபதிகள் கடற்கரையில் முகாமிட்டனர். கடற்கலங்கள் மருத்துவர்களைச் சுமந்து கடலில இறங்கின. எதுவுமே எங்களுககுச் சாதகமாய் அமையவில்லை; மன ஓர்மத்தைத் தவிர. எமது பாதுகாப்புப் படகுகள் எதிரியின் பல 'டோறா'ப் படகுகளுடன 'கைகல'ப்பில் ஈடுபட்டன. எமது மூன்று படகுகள் மூழ்கின. மூன்று லெப். கேணல்கள் உட்பட 20ற்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்தனர். நோய்வாய்ப்பட்ட போராளிகள் வன்னிவந்தனர். தேவையான மருத்துவ வளங்கள் திருமலைக் காட்டை அடைந்தன. சாவை எதிர்கொண்டு சாவில் இருந்து போராளிகளை காத்தோம்.

'ஜயசிக்குறு' முறியடிப்புச் சமர் தொடர்கின்றது. முதற்காயம் மாறுமுன்னர் மூன்றாம்முறையில் சிதைந்த பொறந்தேகங்கள் ஏராளம். எமது ஆளணிவளம் குறைகின்றது. பலர் நிரந்தர ஊனங்களைச் சுமக்கின்றனர். இவர்களைச் சீராக்கினால் தன் நிர்வகங்களை இவர்கள் பொறுப்பேற்பார்கள் அங்கு பணியாற்றுபவர்கள் போருக்குச் செல்ல முடியும். அதற்கு எதுதேவை? புதிய புத்தகங்கள், நவீன உபகரணங்கள், இப்பொழுது மருத்துவ, வியாபார

உலக அறிவுடைய நீலனைச் சுமந்து கடற்புலிக் கலங்கள் பயணம் தொடர்ந்தன. எவை எவை தேவையென எமது பிரதம மருத்துவர்கள் சுட்டினார்களோ அவற்றையெல்லாம அள்ளிவந்து குவித்தார்கள். அதற்காக அவர்கள் செலுத்திய விலையானது என்றோ ஒருநாள் தனியொரு புத்தகமாகும் வன்னிக் கானகங்கள் நவீன வசதிகளைக் கொண்ட மருத்துவ மனைகளை பிரசவித்தன. போராளிகளின் இறப்பு வீதம குறைய, நோய்மாற்று வீதம் அதிகரிக்க எம் போரிடும் ஆற்றல் வாமனவதாரம் எடுத்தது. ஓயாத அலைகள் 1, 2களிலும் அது வெளிப்பட்டது.

திடீரென சில முக்கிய மருந்துகள பாரிய அளவில்தேவைப்பட்டன. நீலனுக்குச் செய்தி தெரிவிக்கப் பட்டது. இதோவருகின்றோம் என தேவையானவற்றுடன் கடற்புலிகள் புறப்பட்டு வந்தனர் மேகக் கூட்டங்களும், சிறு தீவுமுனைகளும் எம் 'ராடர்'களை ஏமாற்றின. அலையினைக் கிழித்து இருளினூடு விரைந்துவந்த படகுகள் எதிரியின் முற்றுகையினுள் சிக்கின எமமரபிற் கேறப சமராடியவர்கள் இறுதியில் படகுகளை வெடிககவைத்தனர் லெப்.கேணல் நீலன். கடற்சமர்த் தளபதிகள் உட்பட 10ற்கு மேற் பட்டவர்களின் வித்துடல்கள் மருத்துவப் பொருட்களுடன் கடலில் மிதந்து, அலையில் அடிபட்டு அக்கரை சேர்ந்ததாகசெய்தி வந்தது. எனினும அவர்களினால் பெற்றுத்தரப்பட்ட வளங்களினால் பல போராளிகளும் மக்களும் மறுபிறப்பு எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

o o o

சிறு ரவையொன்று ஊடுருவி முன்னாணை அறுப்பதுவாய் தளபதி கேணல் பால்ராஜ் தலைமையிலான அணி குடாரப்பில தரையிறங்கியது. ஏனையவற்றைப்போலவே மருத்துவர்கள், உதவியாளர்கள் சிறுசத்திர சிகிச்சைக் கூடங்கள், இரத்த வங்கிகள் என மருத்துவ செயற்பாட்டிற்குத் தேவையான அனைத்தையும் தரையிறக்கி கடமைமுடித்து கடற்புலிகள் தலைநிமிர்த்தினர். அதற்கான ஆரம்பநாள் சமரிலேயேபலமைக்கொடுத்து நூற்றுக்கு மேற்பட்டோர் காயமுற்றனர். போரியல் விஞ்ஞானத்தின் புதிய அத்தியாய திறப்பிற்கு கடற்புலிகள் அடிகோலித்துக்கொடுத்தனர்.

எண்ணிறைந்த கடற்சமரை வழி நடத்தியவரும். எம் மருத்துவ வளத்தில் கணிசமானபங்கு கையிற்கு வர காரணமாக அமைந்தவரும, கடற்கரும்புலியும், முன்னணி தளபதிகளில ஒருவருமான லெப். கேணல அமுதசுரபி பாரிய காயத்திற்கு உட்பட்டிருந்தார். அவரைக்காகக பல மருத்துவ நிபுணர்கள் ஒருமாதகாலமாகப் போராடினார்கள் எனினும் எம் நோக்கம அப்போது கைகூடாமல் போனது. மருத்துவத்திற்கு உயிர் தந்து அதனால் போராளிகளிற்கு உயிர்தந்த ஒரு உயிர் மடிந்து போனது எமக்கெல்லாம் துக்கம் நெஞ்சை அடைத்தது.

நெருக்கடிகளை வென்று தமிழீழம் இன்று அடைந்திருக்கும் அசாத்திய மருத்துவ ஆற்றலின் அத்திவாரங்கள் 'கடற்புலிகள்' என்றால் அது மறுப்பதற்கில்லாதது. △

# அநீதியக்கடுதாசி

29. 09. 1995 — மிகுதன் —
பருத்தித்துறைக் கடற்பரப்பு

கப்பல் தொடரணி ஒன்று நகர்ந்து கொண்டிருந்தது. கடலின் நெஞ்சினில் மேலானநகர்வு. பலாலி கூட்டுப் படைத்தளத்திற்கான இரையை அத் தொடரணி காவிச்சென்று கொண்டிருந்தது. ஏற்கனவே அக் கடல் அவர்களுக்கு மனதில் ஒவ்வாமை உணர்வை ஏற்படுத்தியிருந்தது. அந்த திகில் பயணத் தொடரில் கடலின் அடிவயிறே கலங்கும் பேரொலி. தொடர் வேட்டுச் சத்தம். எது நடக்கலாம்என்று நினைத்தார்களோ அது நடந்தே விட்டது. சிதறி ஓடிய கடற் கலங்கள் ஒவ்வொன்றும் தாக்கப்பட்டன. தாய்க் கப்பல் 'லங்கா முடித' சேதப்பட்டபடி கடலில் உயரப் போனது. 'டோறா' படகொண்டிலிருந்த கடற்படை அழிந்து போனது. மீதி தொலைந்து போனது. படகு மட்டும் கைகளில் சிக்க அது கரை கொண்டுவரப் பட்டது. வரும் பொழுதே அது இழந்த தன் புத்திரர்களுக்காக உடன் கட்டை ஏறிக் கொண்டது. கடற் படையின் உயிர் நாடியையே உலுக்கி விட்டது அந்தச் சமர். எம்மை எதுவுமே செய்து விடமுடியாது என இறுமாந்திருந்தவர்கள் நிதானமிழந்து போனார்கள். பரிகாரமாக அவர்கள் மீண்டும் முருங்கையில் ஏறும்போயானார்கள். அதற்காக இம்முறை அவர்கள் பயன்படுத்தியது பீரங்கிகள் அல்ல. துப்பாக்கிச் சன்னங்கள் அல்ல; விமானங்களையே.

'சியாமாச் செட்டி' யுகம், 'புக்காரா' யுகம், 'சுப்பசொனிக்' யுகம், 'கிபிர்' யுகம், 'மிக்' யுகம் ... ... என வழி யுகத்தின் வரிசையில் அது 'புக்காரா' யுகமாயிருந்தது. ஏவிய பணிமுடிக்க ஒன்றல்ல மூன்று 'புக்காரா' க்கள் நிலம் விட்டு மிதந்தன......

''எங்கட சொந்த இடம் மயிலிட்டி''

''தொண்ணூறுகளில அங்க இருக்கேலாமல் போச்சுது. ஒரே செல்லடி; அப்பிடியே நாகர் கோவிலுக்கு வந்தனாங்கள''

பாய்விரிக்கப்பட்ட குந்திலிருந்த படியே தொடர்ந்து சொல்லும் அங்கலாய்ப்புடன் அந்தப் பெண்

''அப்ப நான் ஆறாம் வகுப்பு.நானும் மூன்று சகோதரங்களும் நாகர் கோவில் பள்ளிக் கூடத்தில தான் படிச்சனாங்கள.
அண்டு பள்ளிக்கூடத்தில ஏதோ நிகழ்வு. இடைவேளை விட்டிருந்தது. தம்பியாக்கள் கேட்டவங்கள்.

'அக்கா வா வீட்டபோவம்,' எண்டு நான் வரவில்லை எண்டு சொல்லிப் போட்டு நிண்டனான். கொஞ்ச நேரத்தில தூர ஒரு ஆண்டுச் சத்தம கேட்டது. அதுக்குபிறகு...''

நேரம் 12. 50 திகதி 22. 09 1995

வான்வெளி கிழித்து சீறிச் சினந்தபடி வந்தன மூன்று புக்காராக்களும். இடையில் ஓரிடத்தில் எச்சமிட்ட பின்பு வட்டமடித்து திரும்பின. எச்சமிட்ட இடத்தில் புற்களும் பற்றைகளும் எரியத்தொடங்கியது. திரும்பிய வான் கழுகுகளின் கண்களில் சிக்கியது பாடசாலை. மொட்டுக் காளான்களாக ஓடித்திரிந்த சிறுவர்கள அவற்றுக்கு விருந்துணவாக தெரிந்தனர். தாளப் பறந்த வான் கழுகொன்று வீசிய குண்டு வெடித்துப் புகைந்தது. அதுவரை ஒதுங்கி பயந்து நின்ற மாணவர்கள் மரண பீதி கண்டு சிறுவானம் என பயத்துக் கொண்டு ஓடத்தொடங்கினர். இதைக் கண்டு விட்டது மற்றைய வான் கழுகு. அதன் கண்கள் மதிய சூரிய கதிரால் பளிச்சிட்டன. வெறிகொண்டு அவை மாறி மாறி குதித்துக்கிளம்பின. கடல் நுரைத்து கிளம்புவதை பார்த்து பழகியவர்களின் கண்கள் மண் புகைத்து கிளம்புவதை கண்டன. புகைப் புழுதியினூடு சீறிப் பாய்ந்த மரணவேட்டுக்கள் அவ்விடத்தை ஒருகொலைக்களமாக மாற்றியிருந்தன. வெள்ளை போர்த்து திரிந்தவர்கள இரத்தக்காப்பு சாத்தப்பட்டிருந்தனர். எங்கும் மனித உடல்கள் குவிந்திருந்தன. மரண ஓலங்களும் வேதனை முனகல்களும் காதை நிறைத்தன. எவர் உடலில் உயிருண்டு எவருடலில் உயிரில்லை என்பது அறிய முடியாதிருந்தது. புத்தகங்களை பற்றியபடியிருந்த கைகளும் சிறு காலணிகள் அணிந்த கால்களும் திசைக்கொன்றாக சிதறியிருந்தன.

''எங்களுக்கு மேல சுத்தின ஒரு பிளேன் போட்ட குண்டு வெடிச்ச உடன எல்லா பிள்ளையளும பயத்தில ஓட தொடர்ந்து சத்தங் கேட்டுது.

கொஞ்சத்துக்குள்ள என்னையும் தூக்கி வீசிட்டு''
''எழும்புவம் எண்டு கைய ஊண்டினன எழும்பலாமல் கிடந்தது. அப்பதான் சனம் ஓடி வந்து கொண்டிருந்தின. என்னைச் சுத்தி கூடப் படிச்ச பிள்ளையள் எல்லாம சத்தம போடாம குப்புற கிடந்த படியிருந்தின.
ஆனா..........''

''பிறகு அவையள் எழும்பவே இல்லை........''

அசுர ஆட்சியை நடத்தி விட்டு பேய்க் காற்று ஓய்ந்தது போல அதுநடந்து விட்டிருந்தது. இருபத்தைந்து பள்ளிச் சிறுவர்களுடன் மொத்தமாக 40 பேரை பலியிட்டும் 150க்கு மேலானவர்களை காயப்படுத்தியும் விட்டு அந்த வான் கழுகுகள எழுந்து அகன்றிருந்தன. பாடசாலை முற்றத்தில் நின்றிருந்த அத்தி மரம கீழ அணைத்திருந்த பாலைக் கொழுந்துகளுடன் மடிந்திருந்தது. அனர்த்தத்தில் பல மருத்துவமனை விட்டு வெளியேறியவர்களில் பலவாறும் பள்ளிச் சிறுவர்கள தங்கள கால்களை பறிகொடுத்திருந்தவர்;

''நல்ல காலம் தம்பியவையும் நின்டிருந்தா அண்டு எல்லாருமா போய் சேந்திருப்பம்; இடைவேளையெண்ட படியால தான் ஆவயாவு. இல்லாட்டி ........''

நினைக்கவே நெஞ்சு எக்கி கொண்டது.

''அப்பிடியிருந்தும் எங்கட உறவுகளும 3 பேர் செத்திட்டினம்''
''பிறகுதான் எனக்கு விளங்குது என்னால நிரந்தரமா எழும்பி நிக்க ஏலாதெண்டு''
''என்ர இரண்டு காலும சிதைஞ்சு போட்டுது''
என்றாள றஜிதா; சிறுமியாயிருந்த போதே இழந்து விட்ட தன் இருகால்களுடன்.

தன கடற்படை சந்தித்துவிட்ட இழப்புக்கு அந்தக் கடற் கரைக்காற்றை நுகர்ந்தவர்களை சிதைத்துவிட்டிருந்தது சிறீலங்காவின் விமானப்படை.

அரசும் இச் செய்தியை சிவப்புமை கொண்டு வெட்டி தணிக்கை செய்து கொண்டது. (BBC தமிழ் 24. 05. 95)

''ரெண்டு காலும் இல்லாததால நான் இண்டைக்கு தனிய ஒரு வேலையுமே செய்யேலாம கிடக்குது. என்ரபடிப்பும பாழாய் போச்சுது. அதால என்ர வாழ்க்கையும பாழாய் போச்சுது''.

றஜிதாவை மட்டுமில்லாது இன்னும் பல நூற்றுக்கணக்கானவரையும் சேர்த்தே தன் கோர வெறிக்கு பலியாக்கி விட்டிருந்தது அன்றைய நாகர் கோவிலின் நண்பகல். ○

# எனது கோலம்

-கௌடி-

## ஆறு மனமே ஆறு - எம்மை ஆண்டவர் பட்டனர் ஆறு

''சமாதானத்திற்கான யுத்தம்'' ஒருகாலம் தென்னிலங்கையில் இந்தச் சொல்லிற்கிருந்த உற்சாகம் இப்போது 'அம்புலிமாமா' வின் புதையல் கதைகள போல அருமையான களிப்பூட்டும் கற்பனையாக விளங்கப்படத் தொடங்கிவிட்டது.

''ஆயுதங்களைக் கீழே வையுங்கள் சமாதானம் பேசுவோம'' என்ற சொற்தொடர் இப்பொழுதெல்லாம் வெறும் கலாச்சாரச் சடங்குகளில் சம்பிரதாயத்திற்காக ஸ்தோத்தரிக்கப்படும் சொற்தொடர்களாக உணரப் பட்டு விட்டன.

வெற்றிக்கான தேதிக்குறிப்புக்கள் கூட தென்னிலங்கையில் உச்சரிப்பதை எப்பொழுதோ நிறுத்திவிட்டனர். அது வெறுப்பூட்டுவதாக மட்டுமன்றி விசனமூட்டுவதாகவும் அங்கு அமையத் தொடங்கிவிட்டது.

புலிகளைத் தோற்கடிக்கும், தலைவர் பிரபாகரனைக் கைது செய்யும் கோசங்களும் ஒரு காலத்தில் களிவெறியூட்டும் மாயமந்திரச் சொற்களாக இருந்தமை பொய்யில்லை. இப்பொழுதோ, அவையெல்லாம் விருது பெறத்தக்க நல்ல நகைச்சுவையாகவும் கோமாளித்தன உரையாடல்களாகவும பார்க்கப்படத் தொடங்கியாயிற்று.

இந்த விடயங்கள் பற்றியெல்லாம் அப்போதிருந்த சர்ச்சைகள இப்போதில்லை; இருக்கவும் முடியாது. ஒருவிடயத்தை தர்க்கிப்பதற்கும் அது தர்க்கத்திற்கான தகுதியைக் கொண்டிருக்க வேண்டுமல்லவா?

இப்போதைய சர்ச்சைகள் எல்லாம் நாடு பிரிவதைப் பற்றித்தான. அதுவே இன்று தர்க்கத்திற்குரிய தகுதியைத் தென்னிலங்கையில் கொண்டிருக்கிறது. அரசியல் சவடால்களெல்லாம் அதனைச் சுற்றியே உலவ முடிகிறது.

மாற்றம் என்றால் மகா மாற்றம்!

தமிழர்களோ இத்தீவில் எந்த மூலையிலும பொங்கு தமிழர்களாய் புதுப்பொலிவுடன இப்பொழுது மிதப்போடு உலவுகின்றனர. ''பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம நிஜமென்று சங்கே முழங்கு'' என்று தமிழர்களால் முழங்க முடிகிறது.

எப்படி நிகழ்ந்ததிந்த மாற்றம்?

இவையெல்லாம் எங்களின் சரணாகதியைக் கோரிநின்ற சந்திரிகாவினுடைய யுத்த சன்னதத்தின் வைபோகத்தனத்தினுடைய விளைவு. எங்களின சரணாகதியை எதிர்பார்த்து ஜெயசிக்குறுவில ஏறி ஜெனரல் ரத்வத்த மகத்தான கைவிலங்குடன் வன்னி வந்தார். ஓயாத அலைகள் மூன்றிலேறி ஜெனரல் ரத்வத்தவை விலங்கிட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்தார் தலைவர் பிரபாகரன.

எங்கள் இதயங்களுக்கு அவர்கள் முடிவற்ற வலியைத் தந்தார்கள. பதிலாக அதைத் தாங்கி நின்ற நாங்கள எங்கள் கரங்களை எல்லையில்லா வல்லமையாக்கிக் கொண்டோம்.

இப்பொழுது எங்கள் கைகளை நீட்டிக் குலுக்கும் திசையெங்கும் பாதைகள திறக்கின்றன; தடைகள் தகர்கின்றன.

எங்கள் சரணாகதியைக் கோரிநின்றவர்கள் அபயம் தேடி அலைந்து திரிகிறார்கள். எம்மை நசுக்க நினைப்பவர்கள யாரும் இனி விளங்குவர் ''யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம'' என்று.

இந்த மிதப்பு, குனியாத எங்கள் தலைகளுக்கு ஏற்றிவைக்கப்பட்ட கிரீடம். அதனைத் தந்த எங்கள் 'வல்லமையாளனை' நாம வாழ்த்த வேண்டாமா. ○

# கடலில் அவனொரு காவியம்



கடற்புலிகளின் துணைத் தளபதி

## லெப். கேணல் நிரோஜன்

பாலசுப்பிரமணியம் கிருஸ்ணபாலன்

யாழ்ப்பாணம்

வீரப்பிறப்பு:- 24-01-1975

வீரச்சாவு:- 07-10-1999

காலகள் மணலிற்குள்ளால் நடந்துகொண்டிருந்தாலும் மனம் எப்போதும் கடலறையுள்ளேயே நின்றுகொண்டிருந்தது. கடலின் கரையைத் தொட்டுவிட்ட ஒவ்வொரு அலையும் துடித்துக்கொண்டிருந்தது. இந்த அலைகளைப் போலவே இலட்சியத் துடிப்புடன் போராடி மடிந்த நிரோஜனின் நினைவுகள் தான் ஒன்றன் பின் ஒன்றாக எங்கள் நெஞ்சில் அழியாத தடங்களாகப் பதிந்திருக்கின்றன.

கடல்நீரும் துள்ளியெழும் அலைகளும் ஒரு பொழுதில் வாய் திறந்து பேசுமானால் இவனைப் பற்றி, இவன் சாதனைகளைப் பற்றி இவன் இறுதியாய் எப்படி மடிந்தான் என்பது பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கும். ஆனால், அவை இப்போது மௌனமாய் இருப்பதால் அந்தப் பணியை எனது எழுதுகோல் ஏற்றுக்கொள்கிறது. தமிழீழத்தின் கடல்நீரை உங்கள் கரங்களால் தொடும்போது அந்த நீருக்குள்ளும் இந்த நிரோஜனின் கதையிருக்கும்.

1990 இல் இயக்கத்தில் இணைந்து கொண்ட அவனின் கடற்பயணம் 1992 இல் ஆரம்பிக்கின்றது. அன்றிலிருந்து அவனுக்கும் இந்தத் தமிழீழக் கடலுக்கும் நெருங்கிய உறவு. அவன் புதியவனாக கடற்புலிகள் அணியில் இணைந்துகொண்டாலும் குறுகிய நாட்களுக்குள்ளேயே கடலில் நீண்டகால அனுபவமுடையவனைப்போல கடலின் நுட்பங்களைத் திறமையாக அறிந்திருந்தான். அந்த நாட்களில் அவனின் கடற்போரின் திறமையை வெளிக்கொண்டுவந்த அந்தக் தாக்குதல் நடைபெற்றது.

அது ஒரு சிறிய படகு. அந்தச் சிறிய படகிலதான் நிரோஜனின் கடலவழி விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அன்று அந்தப் படகில் தரைப்படைத் தளபதி ஒருவரை ஏற்றியபடி நிரோஜன் படகை ஓட்டிக்கொண்டிருந்தான். அந்த இரவின் இருளில் சடுதியாக ஏற்பட்டது அந்த வெளிச்சம். தளபதியால் இப்போது என்ன செய்வதென்றே புரியாத போதிலும் நிரோஜன் நிதானமாகப் படகை ஓட்டிக்கொண்டிருந்தான். அது டோறாப் படகு என்பதை தெளிவாக அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ஒரு டோறாப் படகின் ஆயுதபலமும், நிரோஜனின் அந்தச் சிறிய படகின் ஆயுதபலமும் ஒப்பிட முடியாதது. ஆனாலும் அந்தக் கடலின் சாதகங்களை அறிந்து, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில சிங்களப் படையைக் கொன்றதுடன் அந்தத் தளபதியையும் பத்திரமாக கரைசேர்த்தான். கடற்புலிகளில் அவனது திறமை வெளிப்படுவதற்கு ஆரம்பமாய் இருந்தது அந்தத் தாக்குதல்தான். அதன்பின் அவன் தீயில் சங்கமிக்கும் வரை கடலில் கடற்புலிகள் சந்தித்த முக்கிய போர்களில் எல்லாம அவன் கலந்துகொள்ளாததென்று எதுவுமேயில்லை.

1996ம் ஆண்டு ஒக்டோபரில் ஒரு நாளின் அதிகாலைப் பொழுது. சுண்டிக்குளத்திலிருந்து கடற்புலிகளின் முகாமினை நோக்கி சிறிலங்கா வான்படை உலங்கு வானூர்திகளும், கடற்கலங்களும் நெருங்குகின்றன. அங்கே கடற்புலிகளுக்கும், சிறிலங்காவின் தரை, கடற்படைகளுக்குமிடையே சண்டை மூண்டது. அந்தத் தாக்குதலை திட்டமிட்டது சிங்களப்படை. அந்தத் திட்டத்தின்படி வெற்றி அவர்களுக்கே. ஆனால் அங்கு நடந்தது அதுவல்ல. சேதத்துடன் சிங்களம் தப்பியோடிக்கொண்டது. ஆனாலும் அது நிரோஜனின் மனதில் நீண்ட கோபத்தை எதிரிமீது ஏற்படுத்தியது. எங்களது வாசல் தேடிவரும் அளவிற்கு சிங்களம் துணிந்தமை அவனுக்குச் சினத்தை ஏற்படுத்தியது. அவன் மனம் கொந்தளித்துக்கொண்டிருந்தது. இதற்குப் பதிலடி கொடுத்தே ஆகவேண்டும். சிங்கம் புலியைத் தாக்குவதற்கு புலியின் குகையைத் தேடிவந்தது. இப்போது சிங்கத்தின் குகையை நோக்கி புலி சென்றுகொண்டிருந்தது.

திருகோணமலைத் துறைமுகத்தை நோக்கி கட்டளைப் படகில் நிரோஜன் கடற்புலிகள் அணியை வழிநடத்திக்கொண்டு முன்னகர்ந்துகொண்டிருந்தான். அவனுக்குத் துணையாகப் படகுகளும், கரும்புலிப்படகுகளும் சென்றுகொண்டிருந்தன. அது திருகோணமலைத் துறைமுகத்தின் வாசல்; அங்கே துறைமுகத்திலிருந்து டோறாக்கள் சண்டைக்குத் தயாராக வெளியே வந்தன. கடலின் தமக்குச் சாதகமான பகுதியில் கடற்புலிகளின் படகுகள் வியூகமமைத்துக்கொள்ளச் சண்டை இப்போது பலமாக நடந்துகொண்டிருந்தது.

நிரோஜன் கட்டளைகளை வழங்கிக்கொண்டு எங்களது படகுகளின் வியூகங்களை மாற்றிமாற்றிச் சண்டைபிடித்தான். கரும்புலிப் படகுகளால் தாக்குவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவன் இப்போது அந்தக் கரும்புலிப் படகை டோறா ஒன்றின் மீது குறிவைத்து நகர்த்தினான். அது டோறா மீது மோதி வெடிக்க டோறா கடல்நீரின்மேல் செயலற்று நின்றது. நிரோஜனின கட்டளைப்படகு அந்த டோறாவை நெருங்கியதும், நிரோஜன் அந்த டோறாவில் பாய்ந்து ஏறிக்கொண்டான். அந்தப் படகின் பிரதான சுடுகலனான 20 மி.மீ கனரக ஆயுதத்தை துரிதமாக கழற்ற முற்பட்டான நிரோஜன். டோறா கடல்நீரில் அமிழ்ந்து கொண்டிருந்தது. நிரோஜனுக்கு அந்த ஆயுதத்தைக் கையாண்ட பயிற்சி இல்லாதபோதும் டோறாப் படகு தாழுவதற்குள் அதைக் கழற்றி விட வேகமாக இயங்கினான். அந்தக் கனரக ஆயுதத்தின் சுடுகுழல் இப்போது அவனது கைகளில இருந்தது. இதே நேரம் மற்றொரு டோறாப்படகு செயலிழந்த டோறாவைக் குறிவைக்க நிரோஜனின் கட்டளைப் படகு மறுபக்கத்தால் திரும்பி அந்த டோறாவைத் தாக்க, நிரோஜன் அந்தக் கனமான சுடுகுழலுடன் கடலிற்குள்ளால் நீந்தினான். அதன் சுமை அவன் உடலை கடலிற்குள் அமிழ்த்தினாலும் அதைக் கைவிடாது நீந்திப்படகேறினான். சிங்கத்தை அதன் குகையில் சந்தித்துத் தாக்கிய திருப்தியுடன் புலி தளம்திரும்பிக் கொண்டிருந்தது.

இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் தமிழர் தேசியப் படையின் கடற்படைத் துணைத் தளபதி அவன். அந்தப்பணியை பொறுப்பேற்றதிலிருந்தே தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படையின் பலத்தை சிதைக்கும் தாக்குதல்களை மேற்கொள்வதும், கடல் மூலமான விநியோகப் பணிகளை மேற்கொள்வதும் தான் அவனது நோக்கமாக இருந்தது. அவன் தரையில் கழித்த நாட்களைவிட கடலிற் தன் கழித்த நாட்கள் தான் அதன் பின் அதிகமாக இருந்தது.

கடலில் விநியோகப் பணியை மேற்கொள்ளும் போது சிங்களக் கடற்படையின் டோறாக்கள் விநியோகப் படகுகளை வழிமறிக்கும். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் குறைந்த படகுகளை வைத்து எதிரியின் கூடிய படகுகளைத் தடுத்துவைத்துத் தாக்குதல்களை மேற்கொள்வதில் வல்லவன் நிரோஜன்.

இப்படித்தான் ஒரு சந்தர்ப்பத்தில் விநியோகப் பணிகளை மேற்கொண்ட படகுகள் சிங்களக் கடற்படையின் தாக்குதலிற் தள்ளானபோது 50 கடல்மைல்களிலிருந்து நிரோஜனின் இரு படகுகள் அந்தக் கடற்களத்தை நோக்கி விரைகின்றன. இடையில் அந்த இரு படகுகளையும் ஏழு டோறாக்கள் வழிமறிக்கின்றன. இப்போது நிரோஜன் அந்தக் கடற்சூழலுக்கேற்றவாறு டோறாக்களை எதிர்கொள்ளத் தயாராகிறான். 'மயூரன்' படகு நான்கு டோறாக்களை எதிர்கொள்ளத் 'தேன்மொழி' படகு மூன்று டோறாக்களை எதிர்கொள்கிறது.

அங்கே அந்தச் சிறிய படகுகள் இரண்டும் அந்த ஏழு டோறாக்களுக்கும் போக்குக்காட்டி முன்னேறிக்கொண்டிருந்தன. இறுதியாக அந்த விநியோகப் படகுகளை மீட்டுக்கொண்டு தளம் திரும்பின கடற்புலிப் படகுகள்.

இப்படித்தான் எமது படகுகளின் பலம் குறைவானபோதும் நிரோஜனின் நிதானமானதும், சாதுரியமானதும், உறுதியானதுமான கட்டளைகள் எதிரியின் திட்டங்களைச் சிதறடிப்பதுடன் கடற்புலிகளின் பணியைச் சரிவர மேற்கொள்ளவும் வழிசமைத்துக்கொண்டிருந்தது.

இந்த நாட்களில்தான் சிறிலங்காவின் அமைச்சரொருவர் ''யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்திற்கு கடல்வழி மூலமான விநியோகமே பலமாக உள்ளது'' என்று தெரிவித்தார். இது நிரோஜனின் காதுகளுக்கு எட்டியதுமே சிறிலங்கா கடற்படைக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டுமென முடிவெடுத்துக்கொண்டான். அடுத்து வந்த காலத்தில் ஒரு நாள் யாழ்ப்பாணத்தை நோக்கி சிறிலங்கா கடற்படையின் கப்பற்தொகுதி ஒன்று சென்றுகொண்டிருந்தது. அந்தக் கப்பற்தொகுதி முல்லைக் கடற் பரப்பைத் தாண்டிக்கொண்டிருக்கும் போது நிரோஜனின் கட்டளைக்குக் கீழ் கடற்புலிப் படகுகள் களமிறங்கின.

மூன்று சண்டைப் படகுகளும் இரண்டு கரும்புலிப் படகுகளும் அலைகளை ஊடறுத்து மேல் நோக்கிச் சென்று அந்தக் கப்பற் தொகுதியை மேவி வந்து கொண்டிருந்தன. ஆனால் அன்றைய நாளில் எங்களது படகுகளின் பலத்தைவிட பன்மடங்கு அதிகரித்திருந்தது எதிரியின்பலம். ஆறு டோறாக்களும், நான்கு படகுகளும் பாதுகாப்பு வழங்க வலம்புரிக் கப்பலும், பபதாக்கப்பலும் அதனுடன் சேர்ந்து ஒரு தரையிறங்கு கலமும் சென்றுகொண்டிருந்தது. எதிரியின் பலத்திற்கு மிகக் குறைவான ஆயுதபலமும், கடற்கலங்களின் பலமும் இருந்தபோதும் அசாத்தியமான துணிச்சலும், சண்டையை வழிநடத்தும் தளபதியின் திட்டமிடலும் எங்கள் பக்கத்தில் அதிகமாயிருந்தது.

→

இப்போது எதிரியின் கப்பற்தொகுதியை இலக்குவைத்து விரைந்தன கடற்புலிப்படகுகள். ஆனால் எதிரியிடம் அத்தனை பலமிருந்தபோதும் அவை சண்டை பிடிக்கப் பயந்து வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. நிரோஜன் கட்டளைகளை வழங்க அந்தக் கப்பல்களை நோக்கி படகுகள் நெருங்கிச் சென்றன. எங்கள் கடற்தளபதியின் வியூக அமைப்பிற்கேற்றவாறு படகுகள் எதிரியின் கப்பற்தொகுதியை நெருங்கியதும் கடற்புலிகள் தாக்குதலை தொடக்கி வைத்தனர். அவை அப்போதும் தொடர்ந்து சென்றுகொண்டிருந்ததால் முற்றிலும் சாதகமற்றதும், எதிரியின் வலயத்திற்குள்ளும் சென்றன கடற்புலிகளின் படகுகள்.

பருத்தித்துறைக்கு நேரே நடுக்கடலில் கடுமையாகச் சண்டை நடந்து கொண்டிருந்தது. கரையிலிருந்து நீண்டதூரம் சென்றுவிட்டதால் முற்றுமுழுதாகவே கடற்புலிகளின் சிறப்புத் தளபதியுடன் தொடர்பு துண்டிக்கப்பட, களத்தில் நின்றபடியே சண்டையை வழிநடத்தினான் நிரோஜன். உயர்ந்து எழுந்துவிழும் அலைகளுக்குள் நிதானமாக நிற்கமுடியாத படகிற்குள் நின்று கொண்டும், சீறிவரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு முகம்கொடுத்தும், நிதானமிழக்காது தெளிவாக கட்டளை பிறப்பித்தபடி அங்கிருந்த மூன்று படகுகளுள் ஒன்றில் நின்றான் நிரோஜன்.

அன்று எதிரியின் கப்பல்களை அழிக்காது தளம்திரும்புவதில்லை யென்று உறுதியெடுத்து அவன் தன் தோழர்களுடன் சமரிட்டுக்கொண்டிருந்தான். இறுதியாக எதிரியின் சுற்றிலிருந்த பாதுகாப்பு கலங்களை ஊடறுத்து 'பபதா' கப்பல்மீதும், 'வலம்புரி' க்கப்பல்மீதும் கரும்புலிப் படகுகள் மோதிவெடிக்க அவை எரிந்தபடியே கடலில் அமிழ்ந்து

- மாரீசமைந்தன் -

கொண்டிருந்தன. அந்த நிறைவுடன் எதிரியின் முற்றுகைக்குள் இருந்த கடல் எல்லைக்குள்ளிருந்து வெற்றிகரமாகத் திரும்பின கடற்புலிப் படகுகள்.

இந்தத் தாக்குதல் முடிந்தபின் மீண்டும் விநியோகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன கடற்புலிப் படகுகள். அந்தப் படகுகளை வழிமறித்து டோறாப் படகுகள் தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கியதும் கரையிலிருந்து படகுடன் விரைந்தான் நிரோஜன். "பிரச்சனையில்லை நான் கிட்டவந்திட்டன், நீங்கள் வடிவாச் சண்டைபிடியுங்கோ'' தொலைத் தொடர்புக் கருவியில் நிரோஜனின் குரல் ஒலித்ததுமே கடற்களத்தில் சமர் புரிந்துகொண்டிருக்கும் போராளிகளுக்கு புது உத்வேகம் கிடைத்தது. அவர்கள் மூர்க்கமாகச் சண்டையிடத் தொடங்கினார்கள்.

நிரோஜன் கட்டளைகளை வழங்கியபடி சண்டை நடைபெற்ற கடற்பரப்பை நெருங்கி டோறாப் படகுகளை விநியோகப் படகிலிருந்து பிரித்துத் தாக்குதலை மேற்கொண்டான். ஆரம்பத்தில் எதிரியின் முற்றுகைக்குள் இருந்தன எமது படகுகள். இப்போது நிரோஜனின் முற்றுகைக்குள்ளாக மாறிக்கொண்டிருந்தன டோறாக்கள்.

நேரம் கடந்துகொண்டிருக்க சண்டை நிலை எமக்குச் சாதகமாக மாறியது. டோறாப் படகொன்றை இலக்கு வைத்து நெருங்கி கனரக துப்பாக்கிச் சூடுகளை வழங்க அது செயலற்று கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. சண்டையிட்ட எல்லாப் போராளிகளும் நிரோஜனுடன் சேர்ந்து கடல் நடுவே உரத்துக் கூச்சலிட்டனர்.

ஆமாம் அன்று தான் ஒரு கடற்சண்டையில் ஒரு கரும்புலித் தாக்குதல் இல்லாது கனரக துப்பாக்கிச் சூட்டினால் ஒரு டோறா செயலிழக்கச் செய்யப்பட்டது. நிரோஜன் அந்த



## போராளியின் குருதிச்சுவடுகள்

டோறாவை கடலில் கைவிடவில்லை. ஏனைய டோறாப் படகுகளுக்கு முகம் கொடுத்தவாறு செயலிழந்த டோறாவை எங்களது படகில் கட்டி இழுத்துவந்தான். அது இடையில் தானாகவே கடலில் மூழ்க ஆரம்பிக்க அதிலிருந்த இராணுவ உபகரணங்கள் அகற்றப்படவும் அது நீருக்குள் முற்றாக அமிழ்ந்தது. இந்தத் தாக்குதல் மூலம் எல்லாக் கடற்புலிப் போராளிகளுக்கும் நிரோஜன் மீதும் அவன் திறமை மீதும் இருந்த நம்பிக்கை இன்னும் உச்சத்தை அடைந்தது.

நிரோஜன் கடற்புலியில் இருந்த ஏழு வருடங்களிலும் இப்படித்தான் பல சண்டைகளை தனது நிதானமான முடிவுகளாலும், நுட்பமான திட்டங்களாலும், நெருக்கடியான நேரத்தில் கூட பதட்டப்படாத செயற்பாடுகளாலும் செய்து வென்று முடித்தவன். கடலில் சண்டை மூழும்போது கரையில் நின்று கட்டளை வழங்கும் போது அவர்கள் அவனின் திறமை மீதுகொள்ளும் நம்பிக்கையால் சண்டைகளை வழிநடத்தும் பொறுப்பு முழுமையாகவே அவனிடம் ஒப்படைக்கப்பட்டு விடும். அவன் வரலாற்றுக்குள் இப்படியான பல தாக்குதல்கள் நிறைந்து கிடக்கிறது. அவனுக்குள்ளே தமிழீழத்தின் கடல் வாழ்ந்துகொண்டிருந்ததால் அவன் எப்போதும் கடலுக்குள் வாழ்ந்து கொண்டிருந்தான்.

இப்படித்தான் சண்டைகளி லெல்லாம் நெருப்பாகச் சீறும் அந்த நிரோஜனின் மறுபக்கம் இந்தச் சண்டைகளைப் போல கடினமானதும் கரடுமுரடானதுமல்ல. அவனின் இதயம் மென்மையானது. ஒவ்வொரு சண்டைகளிலும் அவனுடன் படகிலிருந்து மடியும் போராளிகளின் நினைவால் சண்டை முடிந்ததும் வந்து தனியே இருந்து அழும்போது அவன் ஒவ்வொரு போராளிகள் மீதும் எவ்வளவு பாசம் வைத்திருந்தான் என்பது புலப்படும். அப்போது அவனை ஒரு கடற்படைத் தளபதியாகப் பார்க்கமுடியாது. சண்டைகளின் வெற்றிகளால் அவன் மகிழ்ந்திருப்பதைவிட இழந்த தோழர்களின் நினைவுகளால் அவன் மனம் உருகிப்போவதே அதிகம்.

அவன் சண்டைகள் இல்லாமல் முகாமில் நிற்கும்போது ஒரு சாதாரண போராளிக்கும் அந்த தளபதிக்கும் எந்த வேற்றுமைகளும் கிடையாது. அந்த வேளைகளில் அவனது முகாமுக்குச் சென்றால் நிச்சயமாக அவனை நீங்கள் பிரித்தறிய முடியாது. போராளிகள் எந்த வேலையில் ஈடுபட்டாலும் அவர்களுக்குள் ஒருவனாக அவனும் நிற்பது வழமையானது. விளையாட்டுக்கள் என்றால் கூட அப்படித்தான். விளையாட்டுக்களின் போது மிகவும் சுவாரசியமாக அந்த நேரத்தைக் கழிக்கும் தன்மை அவனுக்கே உரியது.

தொடர்ச்சியாக இரவுபகலாக பணிகள் நடந்துகொண்டிருந்த நாட்களில் போராளிகளை உற்சாகப்படுத்துவதற்காக விளையாட்டுப் போட்டி ஒன்றை நடாத்த கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திட்டமிட்டபோது அவன் விளையாட்டு அமைப்பாளர் குழுவிற்குள் செல்லவில்லை. அவன் போட்டியிடும் வீரர்களின் இல்லமொன்றில் அவர்களில் ஒருவனாகச் சேர்ந்துகொண்டான். அவன் அந்தப் போட்டிகளின் போது நீச்சல் போட்டியில் முதலிடத்தைப் பெற்று தலைவரிடம் பரிசும் பெற்று அந்த மகிழ்வில் தன் தோழர்களுடன் சேர்ந்து துள்ளிக்குதித்தான்.

அவனின் திறமை விளையாட்டில் மட்டுமல்ல. ஒரு கடற்படைத் தளபதிக்கு இருக்கவேண்டிய அத்தனை தகுதிகளுமே அவனிடம் திறமையான விதத்தில் காணப்பட்டது. அவன் கடற்புலிகளின் படைத்துறைப் பள்ளிப் பொறுப்பாளனாக, தொழில் நுட்பக்கல்வி பொறுப்பாளனாக, ஒரு கப்பலின் பிரதான இயந்திரவியலாளனாக என பல பணிகளைச் செய்து முடித்த பின்னரே கடற்புலித் துணைத்தளபதியாகப் பொறுப் பெடுத்துக்கொண்டவன். ஆனாலும் இந்த இளம்தளபதி சிறிலங்காவின் கடற்படைத்தளபதி ஒருவனைவிட பன்மடங்கு உயர்ந்தவன். ஏனெனில் அவன் சண்டைகளில் வென்றது கடற்கலங்களின் அதிகரித்த பலத்தினாலல்ல. உறுதிமிக்க போராளி களின் நெஞ்சுரத்தை துணையாக்கி தனது நுட்பமான திட்டமிட்ட தாக்குதலினால் மட்டுமே அப்படி இல்லாவிட்டால் இந்தச் சண்டை யில் அவன் வென்றிருக்கவே முடியாது.

அன்றைய தினம் 07-01 1999 அன்றும் விநியோகப்பணியில் ஈடு பட்டு கொண்டிருந்தன கடற்புலி களின் இருபடகுகள். அவற்றில் ஒன்றில் நிரோஜன் நின்றபடி படகு

'எந்தச் சிக்கலான சண்டையெண்டாலும் நான் அவனிட் டையே கட்டளை வழங்குகிற பொறுப்பை விட்டிடுவன். ஏனெண்டா என்னைவிட அவன் சிக்கலான சண்டையள்ள கூட தானும் பதட்டப்படாமல் போராளிகளையும் பதட்ட மடையாமல் வைச்சு சண்டைபிடிச்சு வெற்றிகொள்ளிறதில திறமையானவன். இதில அவனுக்கு நிகர் அவனேதான்''

களை வழிநடத்திக் கொண்டிருந்தான். கடலின் நடுவே இந்தப் படகிரண்டையும் பலம் பொருந்திய நான்கு டோறாக்கள் முற்றுகையிடுகின்றன. சண்டை மிக நெருக்கமாக நடந்துகொண் டிருந்தது. மாலை மங்கிய பொழுதில் அந்தச் சண்டை ஆரம்பித்தபோதும் விடிசாமம் வரையும் அந்த நான்கு டோறாக் களிடமிருந்தும் தன்படகுகளைப் பாதுகாத்து வியூகமிட்டுச் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அவன் தொலைவில் உள்ள எங்கள் கரையிலிருந்து எப்போதும் போலவே இப்போதும் உதவியை எதிர்பார்க்கவில்லை சண்டை தொடர்ந்து நடந்துகொண் டிருந்தது. நீண்டநேரம் கடந்து விட்டதால் படகொன்றில் எரி பொருள் தீர்ந்துபோக அந்தப் படகை நான்கு டோறாக்களும் சுற்றி முற்றுகை யிட்டுக்கொண்டன. அவன் அப்போதும் உதவியை எதிர்பார்க்க வில்லை. சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி டோறாக்களை ஊடறுத்துப் புகுந்து தனது எரி பொருளில் பாதியை அந்த படகுக்கு வழங்கிச் சேதமில்லாமல் அந்த நான்கு டோறாக்களுக்கும் போக்குக்காட்டி கரைசேர்ப்பித் தான்.

அதனால் தான் கடற்புலிகள் தளபதி சூசை அவர்கள் அவனைப் பற்றிக் குறிப்பிடும்போது "எந்தச் சிக்கலான சண்டையெண்டாலும் நான் அவனிட்டையே கட்டளை வழங்கிற பொறுப்பை விட்டிடுவன். ஏனெண்டா என்னை விட அவன் சிக்கலான சண்டையள்ள கூட தானும் பதட்டப்படாமல் போராளிகளையும் பதட்டமடையாமல் வைச்சு சண்டைபிடிச்சு வெற்றி கொள்ளிறதில திறமையானவன். இதில அவனுக்கு நிகர் அவனே தான்'' என்றார்.

இந்தத் திறமையான தளபதி தான் 07 01 1999 அன்றும் விநியோகப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விநியோகப் படகுகளை நடுக்கடலில் டோறாப் படகுகள் வழிமறித்தபோது கரையிலிருந்து தனது கட்டளைப் படகுடன் இரண்டு படகுகளையும் அழைத்துக்கொண்டு கடற்களத்தில் இறங்கினான். அன்று கடல் கொந்தளிப்பாய் இருந்தது. கடும் இருள் கடல்வெளியினையே மறைத்துக்கொண்டிருந்தது. படகில் பொருத்தப்பட்டிருந்த கருவிகள் காலநிலைக் குழப்பத்தால் தங்களது பணியைச் செய்ய மறுத்துக் கொண்டிருந்தன. நிரோஜன் தன் நீண்டகால கடல் அனுபவத்தினை மட்டுமே வைத்துப் படகினை நகர்த்தினான். விநியோகப் படகிற்கு எதுவும் நடந்துவிடக் கூடாது என்ற உறுதி யுடன் படகை நகர்த்தினான். இடை யில் துணைப்படகுகள் இரண்டும் இயந்திரக் கோளாறினால் மெதுமெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தது. அவன் அவற்றை எதிர்பார்க்காமலேயே தனது கட்டளைப் படகை மட்டுமே வேகமாக சண்டைமூண்ட பகுதிக்கு நகர்த்தினான். அன்று அவன் சிங்களப்படைக்கு எதிராக மட்டுமல்ல இயற்கைக்கு எதிராகவும் சண்டை பிடிக்கவேண்டியதாயிருந்தது.

அவன் எங்களின் விநியோகப் படகுகளை நெருங்கினான். அங்கே எங்களது ஒரு படகைக் காணவில்லை. அது டோறாவின் தாக்குதலில் சிக்கி மூழ்கியிருந்தது. ஆனால் அதில் வந்த உயிர்களுக்குச் சேதமில்லை. அவை பத்திரமாக ஒரு படகில் இருந்தன அவன் அந்தத் திருப்தியுடன் தன் ஒரு படகை வைத்து எதிரியின் அதிகரித்த பலத்தை எதிர்கொண்டான். கடல் இப்போதும் முரண்டுபிடித்துக் கொண்டிருந்தது. இருளுக்குள் டோறாவின் நிலைகள் அவன் கண்களுக்குள் தெரியவில்லை. விநியோகப்படகு பத்திரமாய் கரைதிரும்பிக்கொண்டிருந்தது. இப்போது நிரோஜனின் கட்டளைப் படகு எதிரியின் தாக்குதலில் செயலற்றுக் கடலில் நின்று கொண்டிருந்தது. அவன் படகின் இயந்திரங்கள் மௌனமாய்க் கிடந்தன. எப்போதும் எந்தச் சண்டையிலும் உதவியை எதிர் பார்க்காதவன் இன்றுமட்டும் "எனர படகுக்குச் சேதம், முடிஞ்சா உதவிசெய்யுங்கோ இல்லாட்டி பிரச்சனையில்லை'' அவனின் அந்த வார்த்தைகள் தொலைத்தொடர்புக்கருவியில் கேட்டதும் துணைக்குச் சென்ற படகுகள் இரண்டும் தங்களால் இயன்றமட்டும் வேகமாக முயற்சித்து முன்னேறின. அங்கே அவர்கள் நிரோஜனின் படகை நெருங்கினார்கள். இப்போது அவர்களின் கரங்கள் ஓய்ந்து போனது. கண்களால் வழிந்த நீர்ச்சுருப்புகள் உடலைவிட்டுத் துளித்துளியாய் படகுக்குள் விழுந்தது அந்த வீர கடற்புலி மரபுக்கமைய இறுதிவரை சண்டைபிடித்து தன் கடமையை நிறைவேற்றிய திருப்தியுடன் எரிந்துகொண்டிருந்த தோழர்களுடன் படகோடு தீயில் சங்கமமாகிக் கொண்டிருந்தான். ○

( 01ஆம் பக்கத் தொடர்ச்சி )

## தாயகம் - தேசியம் - ....

றன. ஆகவே, சர்வதேச ஊடக வியலாளர்களை இங்கு வரவழைத்து சமாதான முயற்சிகள் தொடர்பான எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்துக்கூறி, சமாதானவழியில் அரசியல் தீர்வுகாணும் உறுதிப்பாட்டுடன் புலிகள் இயக்கம் உள்ளது என்பதையும்- அதற்காக நேர்மையுடனும், உண்மையுடனும் நாம் செயற்பட்டு வருகின்றோம் என்பதையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறுவதே இந்தச்செய்தியாளர் மாநாட்டின் நோக்கமாகும்'' என்று பதிலளித்தார்.

முன்னைய பேச்சுவார்த்தைகளைப் போலவே இப்போது நடைபெறும் சமாதான முயற்சியும் தோல்விகாணுமா! அல்லது வெற்றிகரமாகத் தொடருமா! என்று கேட்டதற்கு தலைவர் பிரபாகரன் கூறினார்... ''முன்னைய பேச்சுவார்த்தைகளை விட இது முற்றிலும் வேறுபட்டது. ஏனெனில், இங்கே மூன்றாம்தரப்பு அனுசரணையாளராக நோர்வே செயற்படுகின்றது. எனவே, இம்முறைப் பேச்சுவார்த்தைகள் நல்லமுறையில் நடைபெறும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்குண்டு''

'அப்படியாயின், தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு சமஸ்டி முறைபோன்ற அரசியல் வடிவத்தை ஒரு நிரந்தரத்தீர்வாக ஏற்றுக் கொள்வீர்களா எனக்கேட்டபோது தலைவர் பிரபாகரன் சொன்னார்... ''அதற்கான ஒரு அவசியம் ஏற்படவில்லை. தனிநாட்டுக்கோரிக்கையானது தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட ஒரு அரசியல்ஆணையாகும். 1977ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தமிழீழத் தனி அரசை அமைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் வாக்களித்து மக்களாணையை வழங்கியிருந்தனர். அந்த மக்களாணை மனுவை ஏற்றுக் கொண்ட நாம் எமது மக்களின் அரசியல் சுதந்திரத்திற்காகவும் - தனி அரசிற்காகவும் போராடிவருகின்றோம். தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்பன தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளாகும். இந்த முப்பெரும் அரசியல் ஆதாரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓர் அரசியல்தீர்வு முன்வைக்கப்படுமானால், அதை எமது மக்களும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தனி அரசுக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்வதுபற்றி நாம் பரிசீலிப்போம்.

ஈழத்தைத்தவிர மற்றய விடயங்கள் பற்றிப்பேச தான் தயாராக உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறியுள்ளார். இப்படியான நிலைப்பாட்டுடனேயே தாய்லாந்து செல்ல உள்ளீர்களா! என்று கேட்டபோது தலைவர் சொன்னார்... ''இப்போதைக்கு ஒருமுடிவும் எடுக்கப்படவில்லை. முடிவான தீர்வுகளும் எட்டப்படவில்லை இடைக்கால நிருவாகத்தை நடாத்துவது தொடர்பாகப் பேசத்தான் நாம் தாய்லாந்து செல்ல முடிவெடுத்துள்ளோம்''

இடைக்கால நிருவாக அலகு பற்றிக் கேட்ட போது ''தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் போதுதான் அதற்குரிய அதிகாரங்ள் பற்றிப் பேசி முடிவெடுக்கவுள்ளோம். எனவே, இடைக்கால அரசு எப்படி இருக்கும்- எவ்வாறு செயற்படும் என்று இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றம்பற்றித் திருப்திப்படுகின்றீர்களா! என்று கேட்டதற்கு தலைவர் சொன்னார்... ''ஆம், நான் திருப்திப்படுகின்றேன். அத்துடன், சமாதானப் பாதையில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அவர்கள் துணிச்சலான - உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் சமாதான முயற்சிகளைக் குழப்ப முனைவாரா! என்று கேட்டதற்கு ''நாங்கள் அப்படி நினைக்கவில்லை'' என்று பதிலளித்த தலைவர் அவர்கள் ''அவ்விதம் அவர் முயற்சிப்பாரேயானால் அதைக் கையாளவேண்டிய பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினுடையதாகும்'' என்றார்.

தமிழர் தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்பவற்றை ஏற்றுக்கொண்ட ஒரு தீர்வை ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்வைக்குமா! என்று கேட்டதற்கு தலைவர் பிரபாகரன் கூறினார்... ''இத்தகையதொரு நிரந்தரத் தீர்வை முன்வைக்கும் அரசியல் அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் இப்போதைய நிலையில் இல்லையென்றுநாங்கள் கருதுவதாலேயே ஒரு இடைக்கால நிருவாகத்தை சிபார்சு செய்துள்ளோம். இந்த இடைக்கால நிருவாகத்தால் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி அடையும். அதுபோல தென்இலங்கையை பொருளாதார ரீதியாக அபிவிருத்திசெய்ய ரணில்விக்கிரமசிங்கவால் முடியும். எனவே, தமிழரைப் போல இடைக்கால நிருவாக நடைமுறையால் சிங்களவரும் நன்மை பெறுவர். இதேசமயம், இந்த இடைக்கால நிருவாகத்தால் தேவையான நேரத்தையும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் பெற்றுக்கொள்ளும். அதன்பிறகு நிரந்தரத்தீர்வு பற்றி அவரது அரசாங்கத்துடன் நாங்கள் பேச முடியும்''.

புலிகள் இயக்கம் மீதான தடையை இந்திய அரசு விலக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா! என்று ஒரு செய்தியாளர் கேட்டபோது தலைவர் சொன்னார்... ''அதை நாங்கள் விரும்புகின்றோம் தகுந்த நேரம் வரும்போது எமது இயக்கம் மீதான தடையை நீக்குமாறு இந்திய அரசிடம் கேட்டுக்கொள்வோம்.''

ராஜீவ்காந்தியின் கொலை பற்றிக்கேட்டபோது ''பத்துவருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு துன்பியலான சம்பவம் அதுவாகும். மேலும், இதைப் பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்கவிரும்பவில்லை'' என்று தலைவர் பதில்கூறினார்.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என உலகின் சில நாடுகள் பிரகடனப்படுத்தியிருப்பது பற்றிக் கேட்டபோது... ''சில நாடுகள் அவ்விதம் செய்திருப்பது உண்மைதான். சிங்கள அரசின் சதித்தனமான பரப்புரை காரணமாக சில நாடுகள் எமது இயக்கத்தை தடைசெய்துள்ளன. எனவேதான், பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படமுன்னர் எமது இயக்கம் மீது சிறிலங்கா அரசு விதித்த தடையை அது அகற்ற வேண்டும் என்று நாம் சிறிலங்கா அரசாங்கத்தைக் கோரியுள்ளோம். எமது இயக்கம் மீதான தடையை சிங்கள அரசு நீக்கும்போது எமது இயக்கத்தை தடைசெய்த ஏனைய நாடுகளும் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும்படி நாம் பிரச்சாரம் செய்வோம்'' என்று தலைவர் பிரபாகரன் பதில் கூறினார்.

செம்மணி – கோணேஸ்வரி போன்ற வழக்குகளை பேச்சுவார்த்தைக்காக விட்டுக்கொடுக்க விரும்புவீர்களா! என்று கேட்டபோது தலைவர் சொன்னார் ... ''இந்தப் படுகொலைகள் பற்றிய வழக்குகள் தொடர்ந்து நடக்கவேண்டும். இந்த மனிதப்படுகொலைகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் நீதியின்முன் நிறுத்தப்படவேண்டும்.''

சிறிலங்காவின் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழிளைஞர்களது விடுதலைக்காக புலிகள் இயக்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை பற்றிக் கேட்ட போது... ''தமிழ் இளைஞர்களது விடுதலை பற்றி நாம் தொடர்ச்சியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றோம். இவர்களில் பெரும்பாலானோர் புலிச்சந்தேகநபர் என்று கூறி பயங்கரவாததடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்து - சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே, இந்தக் கொடும் சட்டம் நீக்கப்படவேண்டும் என்று சிறிலங்கா அரசை பேச்சுவார்த்தைகளின் போது கோரப்போகின்றோம். இதேவேளை, இவர்களது விடுதலை தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றும் அவர்களைக் கோரியுள்ளோம்'' என்று தலைவர் பிரபாகரன் பதிலளித்தார்.

O



வன்னியில்,¦¦10/04/2002 நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழீழத் தேசியத்தலைவருடன் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் மற்றும் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்